உ
கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி-சகூ.] நந்தன-பங்குனி—விஜய-சித்திரை-மீ [பகுதி. ரு-சு.
Vol. 49. March—May 1953 No. 5-6.

தொல்காப்பியமும் தொனிகாவியமும்

திரு. வித்துவான் K. S. விசுவநாதசாஸ்திரி அவர்கள், தமிழ்த்துறைத்தலைவர்,
S. V. O. கல்லூரி, திருப்பதி.

மனிதனை மனிதனாக வாழ்விப்பதிற் காதலி போன்ற சிறப்புடையது காவியம். காதலனுக்கு உவப்பளித்து இன்புறுத்திக் கொண்டே அவன் நல்வாழ்க்கை நடத்தத் துணையாகின்றவள் காதலி. அவ்விதமே மனிதனுக்கு உவப்பளித்து இன்புறுத்திக் கொண்டே அவன் வாழுமாறு வாழ்வதற்குத் துணையாயமைவது காவியம். காதலித் தன்மை வாய்ந்தது காவியம் என்று ஆன்றோர் கூறுவதும் இதனாலேயே. காதலியைப் போலவே காவியமும் சிறப்புறுதற்கு அதன் எழில் நலமும் இன்றியமையாதது. காவியத்திற்கு அவ் வெழில் நலமாவது எது? இதற்கு முடிவுகாணும் வகையிற் கருத்துவேற்றுமைகள் பல. தொனிநூலோ 'காவியத்தின் எழில் நலமாக அமைவது தொனியே' என்று முடிவு செய்திருக்கின்றது. தலைசிறந்தவொரு காவியம் எவ்வாறு அமைந்திருக்க வேண்டும் என்பதையும் அது விரித்துரைத்திருக்கின்றது. அதன் சுருக்கமுஞ் சிறிது இங்கே தரப்பெறுகின்றது. அது வருமாறு:

காவியத்தில் இன்றியமையாதது காவியப்பொருள். அது இருவகைப் படுகின்றது. அவ் வகைகளுள் ஒன்று வெளிப்படையாக

மொழியப் பெறுவது. மற்றொன்று குறிப்பாக உணர்த்தப் பெறுவது. முன்னது செம்பொருளெனப்படும். பின்னது குறிப்புப் பொருளெனப்படும். இக் குறிப்புப் பொருளே தலைமை பெற்றுச் சிறந்து நிற்குமானால் அஃதே தொனி என்று வழங்கப் பெறும்.

உறுப்புக்களின் வேறாக மாதர்க்கு அழகென்ப தொன்று தனியே அமைந்திருப்பது போலத் தொனி யென்பதும் தனியே காவியத்தின் அழகாக அமைகின்றது. கவிஞனுடைய கவித்திறத்தை விளக்குவதும் அஃதே.

சொற்பொருளறிவினால்மட்டும் அது கண்டறிய இயலாதது. ஆனாலும் அத்தன்மை வாய்ந்த தொனிப் பொருட் சிறப்புடைய சொற்களையும் பொருள்களையுமே புகழ்பெற விரும்பும் புலவன் தேர்ந்து திரட்டிக்கொள்ளுதல் வேண்டும். அவற்றை அவன் தேடிக்கொள்வது, ஒளிவேண்டுபவன் விளக்கை நாடிக்கொள்வதை ஒத்ததே.

ஒரு சொற்றொடர்ப் பொருளை உணரவேண்டுமிடத்து அத்தொடரிலுள்ள ஒவ்வொரு சொல்லின் பொருளையும் நாம் தெள்ளத் தெளியத் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். அதுபோலவே உணரத் தகுவதொன்றை உணர்தற்கு அதனை உணர்த்துகின்ற சொற்களையும் பொருள்களையும் நன்கு ஆராய்ந்து தெளிவதும் இன்றியமையாததே.

ஆனால் தொடர்ப்பொருள் காணும்போது அத்தொடரிலுள்ள சொற்களின் பொருள் தனித்து நில்லாது. அதுபோலவே உணரப் பெறுவதாயதொன்றை உணருங்கால் அதனை உணர்த்துஞ்சொல்லோ பொருளோ தனித்து நில்லாது. உணரப்பெறுவதாய அத்தொனிப் பொருட்கே உபகாரப்படுவதாகி அதற்கே தலைமையையும் அளித்துக் கொண்டிருக்கும்.

இவ்வியல்புடைய காவியமே தொனிகாவியமாம். தொனிகாவியமே தலைசிறந்த காவியமாம். ஆதலின் தொனியே காவியத்தின் எழில்நலமாம். இது தொனி நூல் முடிபு.

இத்தொனி இயல்புகளைச் சிறிது சிந்தித்துக்கொண்டிருக்கும் போது, இவற்றிற்குரிய இலக்கியங்களாகப் பல சங்கச் செய்யுள் களும் பிற்காலச் செய்யுள்களும் அமைகின்றமை காண நேர்ந்தது. பின் தமிழ் இலக்கண நூல்களையும் ஆராய விழைந்தேன். பிறகு தொல்காப்பியமும் இத்தொனி இயல்பிற்குத் துணைபுரிகின்றமை புலப்பட்டது. இந்நிலையிற்கண்ட உண்மைகள் சில இங்கே தரப் பெறுகின்றன.

காவியம் என்ற கருத்திலேயே தொல்காப்பியம் செய்யுள் என்ற சொல்லை வழங்கி இருக்கிறதென்று தோன்றுகின்றது. கவி ஞன் செய்வது காவியம் ஆவதுபோல் புலவன் செய்வது செய்யுள் எனப்பட்டது. இக்கருத்தை 'நல்லிசைப் புலவர் செய்யுள்' என அடைகொடுத்துச் சிறப்பிப்பதன் வாயிலாகத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

மற்றும், தொனியே காவியத்தின் உயிர், தொனியே காவியத் தின் அழகு என்று தொனிநூல் கூறுவதுபோற் கூறாவிடினும், தொனிச் சிறப்புடைய காவியமே தலைசிறந்த காவியம் என்ற முடிவுமட்டும் தொல்காப்பியர்க்கும் ஒத்ததாகவே காணப்படுகின் றது. தொல்காப்பியர் கூறிவைத்திருக்கின்ற செய்யுளுறுப்புக்கள் பலவும் குறைவின்றி அமைந்திருக்குமானால் அவை சிறந்த தொனி காவியமாகவே விளங்க இயலும். தொனிச்சிறப்பைத் தனியே வற்புறுத்த வேண்டிய இன்றியமையாமையும் தொல்காப்பியத் திற்கு நேரவில்லை.

தொல்காப்பியச் செய்யுளுறுப்புக்கள்

தொல்காப்பியம் வகுக்கின்ற செய்யுளுறுப்புக்களுள் மாத்திரை, எழுத்து, அசை, சீர், அடி, யாப்பு, மரபு, தூக்கு, தொடை, நோக்கு, பா, அளவு எனச் செய்யுட் படிவத்தைக் குறைவின்றி அமைப்பன சில.

திணை, கைகோள், கூற்று, கேட்போர், களன், காலம், பயன், மெய்ப்பாடு, எச்சம், முன்னம், பொருள், துறை, மாட்டு, வண்ணம் என அச்செய்யுள் அறிஞரது நல்லறிவிற்கு விருந்தாகி இன்பம் பயப்பதற்குரியன சில,

இங்ஙனம் மாத்திரைமுதல் வண்ணம் ஈறாக இருபத்தாறு உறுப்புக்களையும் எண்ணி 'ஆறுதலையிட்ட அந்நாலைந்து' என்கின்றது தொல்காப்பியம். இவற்றோடு அம்மை முதலிய எட்டுறுப்புக்களுங்கூடக் கூறப்பெறுகின்றன. இவற்றின் இலக்கணமும் விளக்கமும் தொல்காப்பியம் நோக்கித் தெளிக. பிற்கால இலக்கணங்களுட் காணப்படும் ஒரு வேறுபாடும் இங்கே கவனிக்கத்தக்கதாகின்றது. எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்பவற்றை மட்டும் செய்யுளுறுப் பென்பதோ, திணை முதலியவற்றை அகப்பாட்டுறுப் பென்பதோ தொல்காப்பியத்திற்கு மாறுபட்டதே.

தொல்காப்பியம் வகுத்திருக்கின்ற செய்யுளுறுப்புக்களுள் மெய்ப்பாட்டுறுப்பும் எச்சவுறுப்பும் மிகமிக இன்றியமையாதன. தொனிநூல் கூறும் தொனிச் சிறப்பை வற்புறுத்துவன இவ்விரண்டுமே. ஏனெனில் இறுதியிற் கூறிய எட்டுறுப்புக்களும் செய்யுட்கு ஒவ்வொன்றேயும் வரலாம். முற்கூறிய இருபத்தாறும் ஒன்று ஒன்றனை இன்றியமையாது ஒருங்கே வருவன. இவ்வுண்மையைப் பேராசிரியர் உரை நோக்கித் தெளிக.

ஒன்று ஒன்றனை இன்றியமையாது வருகின்ற இவ்விருபத்தாறனுள்ளுங்கூடச் சிலவற்றிற்கு விலக்கும் அளிக்கப்படுகின்றது.

"மாட்டும் எச்சமும் நாட்ட லின்றி
உடனிலை மொழியினுந் தொடர்நிலை பெறுமே"—தொல், செய். 211.

எனச் சில உறுப்புக்கள் குறைந்தும் வரலாம் என்பதே தவிர, இவை இன்றியே செய்யுள் அமைக்கலாம் என்பது இதற்குக் கருத்தாகாது. மக்களுறுப்புச் சில குறைந்தாரையும் நாம் மக்கள் என்று வழங்குவதை ஒத்ததே இவ்விலக்கும். இதனுள்ளும் இன்னொன்று கூர்ந்து நோக்கத் தக்கதாம். எச்சவுறுப்புத் தவிர்க்கப்படலாமேயன்றி, மெய்ப்பாட்டுறுப்பு அவ்விலக்கினாலும் தவிர்க்கஇயலாததே. இவ்வெச்சமும், மெய்ப்பாடுமே தொனிநூல் கூறும் தொனிச் சிறப்பை வற்புறுத்துவன. எச்சமின்றிச் செய்யுள் அமைந்தவிடத்தும் மெய்ப்பாட்டுறுப்பு அமைந்திருத்தல் இன்றியமையாதாதலின், தொனிநூல் தொனியை வற்புறுத்துவதுபோல், தொல்காப்பியம் வற்புறுத்த வேண்டிய நிலை ஏற்படவில்லை.

தொல்காப்பியம் தொனிச்சிறப்புக்கு இணைசெய்கின்றமை

மேல் தொனிச்சிறப்பை வற்புறுத்துவன எச்சமும் மெய்ப்பாடுமே என உணர்ந்தோம். அவற்றுள் மெய்ப்பாட்டை முதற்கண் நோக்குவோம்.

"உய்த்துணர் வின்றித் தலைவரு பொருளான்
மெய்ப்பட முடிப்பது மெய்ப்பா டாகும்"—தொல். செய். 204.

என்பது மெய்ப்பாட்டிலக்கணம். உய்த்துணர்ந்து இடர்ப்படாமல் அந்தந்த மெய்ப்பாட்டைத் தோற்றுவித்தற்குரிய பொருள்களை அமைக்கு மாற்றினாலேயே அம் மெய்ப்பாடும் தோன்றுமாறு செய்வது மெய்ப்பாட்டுறுப்பின் இயல்பாகக் காணப்படுகின்றது.

"கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்"—குறள் 774.

தன்மேல் வந்த யானையின் முகத்திற் கைவேல் கொண்டு எறிகின்றான் ஒருவீரன். அவ் யானையும் அதற்கு ஆற்றாது அவ் வேலோடுஞ் சென்றது. கைவேலை யானையின்மேல் எறிந்து வெறுங் கையுடன் நிற்கின்ற வீரன் மேலும் பொருதற்குப் படை இல்லையே என்று கவல்கின்றான். அந்நிலையில் அவன் மார்பிற் றைத்திருந்த வேல் அவன் கண்ணிற்பட்டது. உடனே அதைப்பறித்து எடுத்துக் கொண்டு தனக்குப் போர்புரியும் வாய்ப்புக் கிட்டினமை குறித்து மகிழ்ச்சியுடன் நகைக்கின்றான் அவ்வீரன். இச் செய்தியைப் படம்பிடித்துக் காட்டுகின்றது இக்குறட்பா. இதன்வாயிலாக இச் செய்தியைக் காணும்போதே அவ் வீரவுணர்ச்சியுந் தோன்றாதிராது. அவ்வுணர்ச்சி வெளிப்பாடே மெய்ப்பாடெனப்படுவதும். இவ்விதமே அந்தந்த மெய்ப்பாட்டைத் தோற்றுவிப்பனவாய செய்யுட்கள் எண்ணிறந்தன வுள. இவையனைத்துந் தொனிநூல் கூறுகின்ற சுவைத்தொனிக்கு இலக்கியமானவே. ஆதலின் மெய்ப்பாட்டுறுப்புச் சிறந்து விளங்குகின்றமையே தொனிநூல் கூறும் சுவைத் தொனித் தன்மை யென்று கொள்வது பொருத்தமாம்.

இனி எச்சவுறுப்பின் இயல்பைக் காண்போம்.

"சொல்லொடுங் குறிப்பொடும் முடிவுகொள் இயற்கை
புல்லிய கிளவி எச்ச மாகும்"—தொல். செய். 206.

இது எச்சவுறுப்பின் இலக்கணம். இதற்குப் பேராசிரியர் விரிக்கும் பொருள் வருமாறு:—கூற்றினானும் குறிப்பினானும் முடிக்கப்படும் இலக்கணத்தோடு பொருந்திய கிளவி எச்சம் என்னும் உறுப்பாம் என்று பொருளுரைத்து, கூற்றெச்சம் குறிப்பெச்சம் என எச்சத்தை இருவகைப்படுத்தி, அவர் உதாரணமும் காட்டுகின்றனர்.

"செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த
செங்கோ லம்பிற் செங்கோட் டியானைக்
கழறொடிச் சேஎய் குன்றம்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே"—குறுந். 1.

என்ற குறுந்தொகைச் செய்யுளை எடுத்துக் காட்டிச் செய்யுள் முடிந்த வழியும், இவற்றால் யாம் குறையுடையேமல்லேம் என்று தலைமகற்குச் சொன்னாளேல் அது கூற்றெச்சமாம்; என்னை? அவ்வாறு கூறவுஞ் சிதைந்ததின்மையின். தலைமகட்குச் சொன்னாளேல் அது குறிப்பெச்சம்; என்னை? அது காண்பாயாகிற் காண் எனத் தலைமகளை இடத்துய்த்து நீங்கிய குறிப்பினளாகி அது தான் கூறாளாகலின்; என விளக்கமுந் தருகின்றார். கூறத்தகுவதொன்றை முடிவாகக்கொள்வதும், குறிப்பாகவே உணர்த்தத்தகுவதொன்றை முடிவாகக் கொள்வதும் ஆக எச்சம் இருவகைப்படும் என்பது அவர்கருத்து இங்கே எடுத்துக் காட்டிய இச்செய்யுளைக் கையுறை மறுக்கின்ற தோழியின் கூற்றாகக் கொண்டால் 'இதனால் யாம் குறையுடையேம் அல்லேம்; ஆதலின் யாம் இதனை ஏலேம்' என்று கூறத்தகுவதொன்று முடிவாக நிற்கின்றது. அது கூற்றெச்சமாம். இங்ஙனமின்றிக் குறியிடத்து உய்த்து நீங்கும் தோழியின் கூற்றாகக் கொண்டால் அவள் கூறத்தகுவது வெளிப்படக்கூறுந் தகுதியுடையதன்றாகலின், குறிப்பாகத் தெரிவிக்கத் தகுந்தவொன்று முடிவாக அமைகின்றது. இந்நிலையில் அது குறிப்பெச்சமாம். ஆகவே கூறத்தகுவதோ அல்லது குறிக்கத் தகுவதோ ஒன்று முடிவாக அமைய, அவற்றைக் கொள்ள நிற்குந் தன்மையுடையதே எச்சமெனப்படுவதாயிற்று. இவ்விருவகையினும் உணரப்பெறுவதொன்று செய்யுள் வாயிலாக உணர்த்தப் பெறுகின்றது. அஃதே முதன்மையும் பெற்றுச் சிறந்து நிற்கின்றது. தொனிநூல் கூறுகின்ற பொருட்டொனியும் இத்தன்மையதே.

இனி, இச்சூத்திரப் போக்கை நோக்குமிடத்து இன்னொரு வகையிற் பொருள் கொள்வதும் பொருத்தமாகத் தோன்றுகிறது. 'சொல்லொடுங் குறிப்பொடும்' என்ற பகுதிக்குக் கூற்றினுங் குறிப்பினும் என்று பொருள்கூறி, கூற்றெச்சமும் குறிப்பெச்சமும் என இருவகை எச்சமும் இதனாற் கொள்வதைக் காட்டினும், சூத்திரப் போக்கைத் தழுவிச் சொல்லினுங் குறிப்பினும் என்றே பொருளுரைத்து, சொல்லெச்சமும் குறிப்பெச்சமும் என எச்சம் இருவகைப்படும் என்று பொருள் கொள்வதே எளிதாகவும் அமைகின்றது. இவ்வாறுகுமிடத்துச் சொல்லொடு முடியக்கூடிய முடிவு ஒன்றைக் கொள்வது சொல்லெச்சமாம். சொல்லோடன்றிச் சொல்வான் குறிப்போடு முடியக்கூடிய முடிவு ஒன்றைக்கொள்வது குறிப்பெச்சமாம். பேராசிரியர் எடுத்துக்காட்டிய இருவகை எச்சமும் குறிப்பெச்சம் ஒன்றனுள்ளே அடங்கும். அங்ஙனமாமானால் சொல்லெச்சமாவது யாதென்றறிதல் வேண்டும். நிற்கின்ற சொற்களை மாற்றவியலாத சிலேடை யடியாகத் தோன்றுகின்ற குறிப்புக்களும் சிலவுள. அவை அங்கு சொல்லோடு முடிவனவாகவே கொள்ளப் படும். மாற்றமுடியாத சொற்களன்றே இரட்டுற மொழிதல்வகையால் இருபொருளுந்தந்து அக்குறிப்பையும் கொள்வனவாகின்றன?

"இடனாக மனையவரே தனஞ்சிறிதும் காணாத சிறியார் தம்மைக்
கடனாக நீர்வினவிப் பிணைதேடி முறிதனையேன் கைக்கொண்டீரே"
—அருணைக்கலம்பகம்.

இதனுள், தனம், சிறியார் போன்ற சொற்களை மாற்றிவிடின் இங்கே காணப்படும் குறிப்புப் பொருளுந் தோன்ற இடமிராது. தலைவனுக்குக் கூறுகின்ற இச்செய்தியே கடன்வாங்க முயலுகின்ற ஒருவனுக்கு ஏற்றதொரு செய்தியுந் தருகின்றது. அவ்வளவோடு நில்லாது, உள்ளுறையாக அமைந்துள்ள உவமைத் தன்மையையும் வெளிப்படுத்துகின்றது. சிறியாரிடத்து-பொருளற்ற அற்பரிடத்து, கடன் கேட்டுப் பெற விரும்பிப் பிணைதேடி முறிச்சீட்டும் வந்திருப்பது எத்துணைப் பயனற்றதோ அத்துணைப் பயனற்றதாம், நகிலுந் தோன்றப் பெறாத இச்சிறியாளை—இளமை யுடையாளைத் தலைவியாகப் பெற விரும்பி மான்தேடி வந்தார் போலச் சில வினவி,

தலைமையும் ஏற்றி நிற்பது. இங்கே வருகின்ற தலைவனது செய்தியும் கடன் வாங்க முயல்வார் செய்தியும் சிலேடை வகையால் மொழியப் பெறுகின்றன. இதற்கு அடிப்படை, மாற்ற வியலாத தனம் சிறியார் போன்ற சொற்கள். அவைகளின்றேல் இவ்விரு செய்திகளும் ஒருங்கே தோன்றமாட்டா. அவை அவ்வாறு தோன்றிய பின் அவ்விடத்திற்கு வேண்டிய செய்தி எது என்ற ஆராய்ச்சி. அதன்பின் தொடர்பின்றி நிற்கின்றதாய கடன் பெற முயல்வார் உவமையாகவும், தலைவன் செய்தி பொருளாகவும் நின்று உவமை அணி ஒன்று உள்ளுறையாக அமைகின்ற உண்மை புலப்படுகின்றது. இவ்வளவிற்குச் செல்லவில்லையானால் தொடர்பற்றதொரு செய்தி ஒட்டிக்கொண்டுநின்று மற்றொன்று விரித்தல் என்ற குற்றமாகவும் கொள்ளப்படும். ஆகவே இத்தகைய இலக்கியங்கள் குற்றமற்றன வெனக் கொள்ளவேண்டுமானால் இங்ஙனமே உவமையணி குறிப்புப் பொருளாகக் கொண்டே ஆகவேண்டும். அஃதும் சிலேடைப் பொருள் தருகின்ற சொற்களையே ஆதாரவாகக் கொண்டு தோன்றுகின்றமையின், அச்சொல்லே இம்முடிவைக் கொள்வதாகின்றது. இத்தன்மையதே சொல்லொடு முடிவுகொள் இயற்கை புல்லிய கிளவி, என்று கொள்வதே பொருத்தமாகவும் காணப்படுகின்றது. சொல்லாற்றலால் தோன்றுந் தொனி என்று தொனி நூல் கூறுகின்ற தொனிவகையும் இத்தன்மையினதே. இதனை அணித்தொனி என்றும் வழங்குவர்.

இனிச் சொல்லோடன்றிச் சொல்வான் குறிப்பொடு முடிவதொன்றைக் கொள்வது பொருளாற்றலால் தோன்றும் தொனி எனப்பெறும். மேற்காட்டிய செய்யுளிற் 'சேய்குன்றம் குருதிப் பூவின் குலைக் காந்தட்டு' என்று முடிந்தபின் இது யார் கூற்று? எந்நிலையிற் கூறப் பெறுவது? என்பன போன்ற ஆராய்ச்சி எழுகின்றது. பிறகு கையுறை மறுக்குந் தோழி கூற்றானால் இக்கருத்தை உணர்த்துவதாகுமென்றும், குறியிடத்து உய்த்து நீங்கும் தோழி கூற்றானால் இக்கருத்தை அறிவிக்கின்றதென்றும் உணர்கின்றோம். இவற்றுள் எதுவானாலும் கூறுவார் கருத்து அத்தன்மையதே. அதற்கே முதன்மையும் சிறப்பும் அமைகின்றது. இத்தன்மையன பொருட்டொனி வகையாய் அடங்கும். ஆகவே சொல்லாற்றலால்

தோன்றும் தொனியும், பொருளாற்றலால் தோன்றும் தொனியும் எச்சவுறுப்பாய் அமைகின்ற உண்மை இதனாற் புலனும். சுவைத் தொனி மெய்ப்பாட்டுறுப்பாக அமைகின்றமையை முன்னரே அறிந்தோம். தொனியின் அடிப்படைப்பாகுபாடு, பொருட்டொனி அணித்தொனி சுவைத்தொனி என மூன்றும். இம்மூன்றும் எச்ச வுறுப்பாகவும், மெய்ப்பாட்டுறுப்பாகவும், தொல்காப்பியரால் அமைக்கப் பெற்றுள்ளன. இவற்றின் இன்றியமையாமை இரு வர்க்கும் ஒத்ததே.

தொல்-பொருளியல் முதலியன இக்குறிப்புக்களை விரிப்பன

தொனியாக அமைதற்குரிய இக்குறிப்புப் பொருள்களை விரித் துரைக்கின்ற முறையிலேயே தொல்காப்பியத்துப் பொருளியல் முதலாய மூன்று இயல்களும் அமைந்திருக்கின்ற உண்மையும் ஆராய்வார்க்குப் புலனும். பொருளியல் கூறுவன வழுவமைதியே என்பது உரைகாரர்களின் கருத்து. அவ்வாறாயின் பொருளதி காரத்துட் பொருளியல், அப்பெயருடன் நடுநாயகம்போற் பொரு ளதிகாரத்தின் நடுவே நிறுத்தப் பட்டிருப்பது சிந்திக்கத் தக்க தாம். பொருளதிகாரத்துட் சிறந்ததொரு பொருட்பகுதியே பொருளியலுட் பேசப்படுவது என்று கொள்வதே ஏற்புடைத் தாம். இன்றேல், இவ்வதிகாரத்துள் நடுநாயகம் போல் நடுவிடம் பெற இயலாது. பெயருங்கூடப் பொருளியல் என்று அமைதற் குப் பதிலாக ஒழிபியல் என்றோ அல்லது எச்சவியல் என்றோ ஏதே னும் ஒன்றாகவே அமைந்திருக்க வேண்டும். சிறப்புடைய செய்யு ளிலக்கணம் வகுக்கின்ற தொல்காப்பியம் அதற்குவேண்டும் சொல் லும் பொருளும் வகுத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. சொல் லின் உறுப்பாய் எழுத்து எழுத்ததிகாரத்துள்ளும், பொருளுணர்த் துஞ் சொல் சொல்லதிகாரத்துள்ளும் உணர்த்தப் பெற்றன. பொருட்பகுதியில் வெளிப்பட மொழியப் பெறுவன பொருளதி காரத்து முதல் நான்கியல்கள்களுள் மொழியப் பெற்றன. குறிப் பாக உணர்த்தப் பெறுவன இப்பொருளியல் முதலாய மூன்று இயல்களுள்ளும், மொழியப்பெறுகின்றன. பொருளியல் முதல் சூத்திரம் இக்கருத்துக்கு அரண் செய்கின்றது.

"இசைதிரிந் திசைப்பினும் இயையுமன் பொருளே
அசைதிரிந் தியலா என்மனார் புலவர்"—தொல். பொருளி. 1.

கூறவேண்டிய பொருளை வெளிப்படக் கூறாது வேறுபட்டு நின்றாலும் கூறவேண்டும் பொருளே பொருளாக வந்தியையுமாம். சொற்கள் திரிந்ததற்காகப் பொருளுந் திரிந்துவிடாதாம். இதனால் நிற்குஞ் சொற்கள் வெளிப்படையாகக் கூறவேண்டும் பொருளை உணர்த்தாவிடினும், குறிப்பாகவாவது அதனையே உணர்த்தி நிற்கும் என்றதாயிற்று. ஆகவே குறிப்பாக உணர்த்தப்படுவன இங்கிருந்து தொடங்கப் பெறுகின்றன என்பதுங் குறித்ததாயிற்று. அன்றியும் குறிப்பான் பொருளுணர்த்துஞ் சொற்கள் சில பகுதிக் கிளவி எனப்பட்டன. இப்பொருளியலும் அத்தகைய சிலவற்றைப் பாற்கிளவி, பால்கெழுகிளவி என்று தொடங்கி ஏத்தல், எளித்தல் முதலாகக் குறிப்பு வகையானுணர்த்தப் பெறுகின்ற அறத்தொடு நிற்றல் வகைகளும் வரைதல்வேட்கைப் பொருளவும் முதலாய பல குறிப்புவகைகளையும் கூறிச்சென்று, இறுதியில் முடிவைத்தது போல் உள்ளுறை ஐந்தையும் உணர்த்துகின்றது இப்பொருளியல். கூறவேண்டுவன பலவற்றையும் வெளிப்படையாக விளம்புதல் வேண்டும் என்பதும் குறிப்பாக உணர்த்துவது வழுவமைதியே என்பதும் சொல்லிலக்கணப் போக்கிற்கு ஒத்ததாகலாம். சிறந்ததொரு காவிய மென்று கருதுதற்குரிய செய்யுளின் பொருள் நோக்கு அத்தகையதன்று. எச்சவுறுப்பும் பெற்றிருத்தல் முற்றிய இலக்கணமாக அமைந்திருக்குமானால், அது குறிப்புப்பொருளின்றி எவ்வாறு சிறத்தல் இயலும்? அவ்வின்றியமையாமையே இப்பொருளியலைத் தோற்றுவித்ததெனலாம். ஆகவே, நல்லிசைச் புலவர் செய்யுட்கு வேண்டும் சிறப்புடைக் குறிப்புப்பொருளின் இன்றியமையாமையே இப்பொருளியல் விரித்துரைக்கின்றதென்று கொள்வதே சாலப் பொருத்தமாம்.

"கல்வரை நாட நீவரின்
மெல்லிய லோருந் தான்வா ழலளே"—அகம். 12.

இவ் வகப்பகுதியை எடுத்துக்காட்டிப் 'பொழுதுமாறும்' என்ற சூத்திரத்துள் 'இது இரவும் பகலும் வாரல் என்றது' என்கின்றனர் நச்சினார்க்கினியர். நீவரின் எனவே வாரல் என்றதாயிற்

ளும். இவ்விலக்கும் அத்தலைவனுடைய வருகையை விலக்குவதில் நோக்குடையதன்றும். வரைவொடுவருக வென்பதே இதன் கருத்தாம். இதனாலேயே வாரல் என்றலும் வரைதல்வேட்கைப் பொருளதாயிற்றும். ஆகவே வரைதல் வேட்கையை உணர்த்துவதே இவ்விடத்து இன்றியமையாததாக அமைகின்றது. அதற்கே தலைமையும் சிறப்பும். இவ்வாறுவரும் குறிப்பே தொனி எனப் படுவதென்பது முன்கூறப்பட்டதே. இத்தன்மைவாய்ந்த குறிப்பு வகைகள் பல இப்பொருளியலுள்ளும் இதனையடுத்துவரும் மெய்ப் பாட்டியல் உவமவியல்களுள்ளும் பெருவாரியாகப் பேசப்படுகின்றன.

தொனியின் அடிப்படைப் பாகுபாடுகளும் உள்ளுறைகளும்

தொனியின் அடிப்படைப் பாகுபாடுகள் பொருட்டொனி, சுவைத்தொனி, அணித்தொனி என்பனவாம். சொற்றொடர்ப் பொருளாய் அமைதற்குரியதொன்று தொனியாக அமையுமானால் அது பொருட்டொனி எனப்பெறும். அன்றிச் சுவையோ அல்லது அணியோ தொனியாக அமையுமானால், முறையே அவை சுவைத் தொனி எனவும் அணித்தொனி எனவும் பெயர் பெறும். தொல் காப்பிய உள்ளுறைகளும் இத்தகைய தொனிப்பாகுபாட்டிற்கு ஒத்த முறையிலேயே அமைந்துள்ளமை கூர்ந்துகாண்போர்க்குப் புலனும்.

'உடனுறை உவமம் சுட்டுநகை சிறப்பெனக்
கெடலரு மரபி னுள்ளுறை யைந்தே'—தொல். பொருள்-48.

என உள்ளுறை ஐந்தையும் பொருளியற்சூத்திரம் கூறுகின்றது. இவற்றுள் உடனுறை இறைச்சி என்ற பெயரோடு விரித்துரைக்கப் பெற்றுளது. உவமமோ, உள்ளுறைஉவமம் ஏனைஉவமம் என இருபகுதிப்பட்டு நிற்க, உள்ளுறைஉவமம் அகத்திற்கே இன்றி யமையாச் சிறப்புடைத்தாதல்பற்றி அகத்திணை இயலுள்ளும் உவம மாதலொப்புமைபற்றி உவமவியலுள்ளுமாக இரண்டிடங்களிலும் விளக்கப்பெற்றுள்ளது. இனி எஞ்சிநிற்பன சுட்டு நகை சிறப்பு என மூன்று, இவை யாண்டு விரித்துரைக்கப் பெறுகின்றன? என வினவின் விடைபெறுதல் இயலாததாகின்றது. இந்நிலையிற் கூர்ந்து சிந்தித்தால் ஒன்று புலப்படுகின்றது. அன்புறுதகுநவும் இறைச்சி

யுட் சுட்டப்படுமென்கிறது பொருளியல்; அதாவது அன்புறு தகுநவாயசெய்தி ஒன்று இறைச்சியின்வாயிலாக உணரவைத்த லன்றே!

"நசைபெரி துடையர் நல்கலும் நல்குவர்
பிடிபசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பொளிக்கும்
அன்பின தோழி அவர்சென்ற வாறே"—குறுந். 37.

என்ற இக்குறுந்தொகைச் செய்யுளை எடுத்துக்காட்டி 'இதனுள் முன்பேநெஞ்சகத் தன்புடையார், அதன்மேலே களிறு தன்பிடியின் பெரும்பசிக்களைதற்கு மென்றோலையுடைய ஆச்சாவைப்பிளந்து அந் நாரைப் பொளிந்தூட்டும் அன்பினையுடைய அவர்சென்ற ஆறதனைக் காண்பார்காண், என்று அன்புறுதகுந கூறிப் பிரிவாற்றாதவளை வற் புறுத்தவாறு காண்க' என்று விளக்குகின்றனர் நச்சினார்க்கினியர். இதனுள் ஆறதனைக் காண்பார்காண் என்று அன்புறுதகுந கூறுத லாவது, இத்தகைய அவ்வழியிலுள்ள விலங்கும் தன் காதலிக்கு அன்புசெய்தலைக் கண்டும் அவர்க்குத் தன் காதலிமாட்டு அன்புபிற வாதிருக்குமோ? அன்பு மிகுவதும் உறுதி; அதன்காரணமாக அவர் விரைவில் மீள்வதும் உறுதி; என்ற கருத்தைத் தோற்றுவிப் பதுதானே! இக்கருத்துத்தோன்றுவிடில் அத்தலைவி ஆறுதலடை வதுதான் எங்ஙனம்கூடும்? இவ்வாறு ஒரு சொற்றொடர்ப்பொரு ளாவதற்குரியதொன்று குறிப்பாக அமைந்துநிற்க, அதனைச் சுட்டு கின்ற நிலையில் இறைச்சி என்ற உள்ளுறையும் அமைவுடையதா கின்றது. இங்ஙனம் ஒரு சொற்றொடராய்ப் பொருளாதற்குரிய தொன்றைக் குறிப்பாகக்கொள்வதே பொருட்டொனி எனப்படுவ தும். இவ்வியல்புடையதொன்றே சுட்டு என்ற உள்ளுறையும் என்று தோன்றுகின்றது. இத்தன்மைவாய்ந்த குறிப்புவகைகளே வரை தல் வேட்கைப்பொருளவாக வருவனவும் அவைபோல்வன பிறவும், இவற்றை விரித்துரைப்பது பொருளியலே,

இனி, நகை எனும் உள்ளுறை யாதெனக்காண்போம். நகை எண்வகை மெய்ப்பாடுகளுள்ளும் முதலாக முன்னிறுத்தப்பெறு வது. அது ஒரு உள்ளுறை ஆகின்றதென்றால் அஃதுங் குறிப்பாக

அமைந்திருத்தல்வேண்டும். அஃதாவது நகை என்ற சொல்லால் வெளிப்படக்கூறாது நகைக்குரிய பொருண்மைப்பினாலேயே நகை தோன்றுமாறு செய்தலாம். அஃதே சிறந்துநின்று அழகு செய்வதாகுமிடத்து, அது நகை எனும் உள்ளுறை என்று கொள்ள வேண்டும். இவ்வியல்பு நகை ஒன்றுக்குமட்டும் உண்டென்றுகூற இயலாது. நகைமுதலாய மெய்ப்பாடுகள் எட்டிற்கும் ஏனைத் துணை மெய்ப்பாடுகள் பலவற்றிற்குமே பொதுவியல்பாம். ஆகவே நகை என்று ஒரு உள்ளுறை வகுத்ததும் மெய்ப்பாடுகள் பலவற்றையும் உள்ளுறையாகக் கொள்ளுங்கருத்தினதே. ஆதலின் 'நகையே அழுகை' என்று முதலில் நிறுத்தி எண்ணப்பட்ட அந்நகையே இங்கு நகை முதலாய எண்வகை மெய்ப்பாடுகளையும் ஏனைத் துணை மெய்ப்பாடுகள் பலவற்றையும் உணர்த்துவதாகி, அவை உள்ளுறையாக நிற்கின்றநிலையில் அவை அனைத்தையும் குறிப்பதாகின்றதென்றுகொள்வதே பொருத்தமாம். தொனிநூல் கூறுகின்ற சுவைத்தொனியும் இவ்வியல்பினதே. ஆதலின் நகை என்ற பெயர் கொண்டு குறிப்பிடுகின்ற உள்ளுறை தொனிநூலிற் காணப்படும் சுவைத்தொனியோடொத்த இயல்பினதாகின்றது.

இனிச் 'சிறப்பு' என்ற உள்ளுறையை எடுத்துக் கொள்வோம். இஃதும் யாண்டும் விரித்துரைக்கப் படுவதாகத் தெரியவில்லை. இதற்கு நச்சினார்க்கினியர் ஒருவாறு விளக்கந் தருகிறார். அஃதும் விளக்கவேண்டியதாகவே காணப்படுகிறது. உள்ளுறை உவமத்துள் உவமம் ஒன்று உணரத்தகுவதாக அமைந்துள்ளது. இவ்விதம் வெளிப்பட மொழியாமல் உவமையணி ஒன்று உள்ளுறையாக அமைந்திருப்பதினாலேயே அது உள்ளுறை உவமம் எனப்படுகிறது. இஃதோ தவலருஞ் சிறப்பினை உடையதாம். இத்தகையதொரு சிறப்பினையுடையதொன்றே, சிறப்பு என்ற 'உள்ளுறையாற் கொள்ளப்படுவதெனக் கொள்வதே சிறப்பென்று தோன்றுகின்றது. அகத்திற்கே சிறப்புடையதாகித் திணை உணர வரும் உள்ளுறை உவமமும் இத்தன்மையவான ஏனையவும் சிறப்பெனும் உள்ளுறையாக வகுக்கப்பட்டிருத்தல் வேண்டும். 'இடனாக மனையவரே' என்பதனுள் உவமம் ஒன்று உள்ளுறையாக அமைந்துள்ளமை முன்பே அறிந்தோம்.

"பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று"—குறள் 753.

இக்குறட்பாவினால் பொருள் பொய்யா விளக்கம் எனப்படுகின்றது. இது உருவகம். இதன்மேலும் எண்ணிய தேயத்துச்சென்று இருளறுக்கும் வேறுபாடுடைமை பொருளுக் குரியதாக்கி, அது வேறுபடுக்கப் படுதலின் வேற்றுமையணி ஒன்று உய்த்துணர வைக்கப் பெற்றுளது. இவ்வாறே உருவகமும், பிற அணிகளும் உய்த்துணரத் தருவனவாக நிற்கின்ற நிலையில் அவைகளும் சிறப் பென்ற உள்ளுறையாக வகுத்துத் தரப்பெற்றுள்ளன.

அன்றியும், உவமத் தோன்றும் நிலைக்களன்களுள்ளும் 'சிறப்பு' முதலதாகக் காணப்படுகின்றது. அவ்வகையிலும் உள்ளுறைத் தன்மை யுடையதாகுமானால், அதனைச் சிறப்பென்ற முதற்பெயர் வாயிலாக உணர்த்துகின்றதென்று கொள்வதும் நேரிதாம். அன்று உவமமும் உவம வேறுபாடுகளுமாக அமைந்திருந்தன. அவையே இன்று உவம அணியும், பிற அணிகளுமாக வழங்கப் பெறுகின்றன. எங்ஙனமாயினும் அணி ஒன்று உள்ளுறையாக அமைவது, சிறப் பென்னும் உள்ளுறை என்று கொள்ளுதல் தகும். அகத்திற்கே சிறப்பாக வருகின்ற உள்ளுறை உவமம் அச்சிறப்பியல்பு நோக்கி வேறு பிரித்தோதப்பட்டதே யாயினும், அஃதும் இச்சிறப்பென்ற உள்ளுறைப் பகுதியேயாம். ஆகவே, அணித்தொனியின் இயல் பும் இவ்வுள்ளுறையின் இயல்பும் ஒத்ததென்றே கொள்ளத்தகும்.

இவ்வுள்ளுறைகள் ஐந்தனுள்ளும் இறுதியில் நிற்கும் மூன்றுமே சாலுமாயினும், அகத்திற்கே சிறப்புடைய இறைச்சியும், உள்ளுறை உவமமும் அச்சிறப்புக் குறித்து வேறுகூறப்பட்டன. அவற்றுள் ளும் உள்ளுறை உவமத்தை உவமமாதல் ஒப்புமை நோக்கி, ஏனை உவமமும் அடங்க உவமமென்றே அடக்கிக் கூறுவாராயிற்று. ஆகவே உடனுறை உவமம் இரண்டும் வேறுபாடு கருதித் தனியே கூறப்பட்ட போதினும், இவ்விரண்டையும் தம்முள் அடக்கிக் கொள்வனவாய சுட்டு, நகை, சிறப்பு மூன்றும் இறுதியில் விளக்கப் பெற்றன. இம்மூன்றிற்கும் விளக்கம் வேண்டுமாயின், பொருளியல் முதல் மூன்று இயல்களும் முறையே அவற்றின் விளக்கமாக

அமைகின்றன. சுட்டு என்ற உள்ளுறையின் விளக்கம் பொருளிய லுட் காணப்பெறும். நகை எனும் உள்ளுறைக்கு விளக்கம் மெய்ப் பாட்டியலுட் காணவேண்டும். சிறப்பென்னும் உள்ளுறையின் விரிவை உவமவியலுட் காண்டல் வேண்டும். இவ்வுள்ளுறைகள் நிறுத்தப்பெற்றுள்ள முறையும், இவ்வியல்கள் அமைந்திருக்கும் வரிசையுங் கூட இக்கருத்திற்கு அரண் செய்வதாகும். ஆகவே தொனிநூற் பாகுபாடும், இத் தொல்காப்பியப் பாகுபாடும் ஒத்து விளங்குகின்றமையும் இப்பொழுது காண இயல்கின்றது.

தொனிப்பொருள் பற்றிய உண்மைகளை முதன்முதலில் விளக்கி மொழிந்தவர் தொனிநூல் இயற்றிய ஆனந்தவருத்தனரே என்பர். இத் தொனிநூற்குப் பன்னூறாண்டுகட்கு முன்னரே தோன்றி யது தொல்காப்பியம். அது இவ்வுண்மைகள் தோன்றுமாறு இலக் கணம் வகுத்திருக்குமானால், அது பாராட்டுக்குரியதொன்றன்றோ! ஆனால் இப்பொழுதுள்ள நிலை என்ன? அவ்வுண்மைகளை உணர்ந்து நாம் பயன்பெற இயலாது, இடையில் மங்கிப் போய்விட்டதென்றே நினைக்கவேண்டி யிருக்கிறது. தொல்காப்பிய உரைகள் ஓரளவு அவ்வுண்மைகளை விளக்குகின்றன வாயினும் பிற்காலத்துத் தோன் றிய இலக்கண நூல்கள் அவ்வுண்மைகளை விளக்கும் வகையில் இலக்கணம் வகுத்தில. தொல்காப்பியனார் செய்யுளுறுப் பென் றோதிய திணை முதலியவற்றை அகப்பாட்டுறுப் பென்று கூறுமள விற்கு அவை விலகியும் சென்றன, என்று நினைக்கவேண்டி இருக் கின்றது. எழுத்து, அசை முதலிய ஏழு உறுப்புக்களையும் வைத் துக் கொண்டு, செய்யுள் படிவத்தை அமைத்த பின்போ அழகைத் தேடித்திரிவது? இத்தகைய குறைபாடுகள் தோன்றுதற்குக் கார ணம், நிறைவுடையதொரு முழுநூலைத் தனித்தனியே பிரித்துப் பல பகுதிகளாக்கி, அவற்றைத் தனித்தனியே நூலாகச் செய்யப் புகுந்தமையின் விளைவாம். இத்தகைய காரணங்களால் இவ்வுண் மைகள் வளம் பெற்று வளர இயலாது போயிற்று. தொனி குறிப்புக்கள் பலவற்றையும் குறிப்பு என்று ஒரு பொதுப்பெயர்

கொண்டே குறித்துச் செல்லவும் நேர்ந்தது. அக்குறிப்புக்களின் வேறுபாடும் விளக்கமும் கண்டு இன்புற இயலாதாயிற்று. இங்நிலையில் தொனிநூல், நமக்குப் பேருதவி புரிகின்றது. தொல்காப்பியத்துள் காணப்படும் இவ்வுண்மைகளை விளங்கக் காண்பதற்கும் இது பெருந்துணையாக அமைகின்றது. ஆனால், ஒன்றுமட்டும் நினைவில் நிறுத்திக்கொள்ளுதல் வேண்டும். முதன்முதல் தொனிக் கொள்கையை வளம்பெற வளர்த்தது தொனிநூலே யாயினும், தொனி என்று வழங்குதற்குரிய பொருளும், அவற்றின் இலக்கணமுங் கூடப் பண்டுதொட்டே வழங்கி வருவனவே. சிறப்பாகத் தொல்காப்பியத்துள் போற்றி வளர்க்கப் பட்டனவே. இடையில் அவற்றை விளங்கக் காண இயலாது அயர்ந்திருந்தோம். அவைகளும் வளர்ச்சி பெறாமல் அப்படியே நின்றுவிட்டன. இப்பொழுது புதியனவாகத் தோன்றுகின்றன. இவ்வளவேயன்றி இத்தொனிப் பொருண்மைகள் தமிழுக்குப் புதியன அல்ல. இவை பிறரிடமிருந்து கடன் வாங்கப்பட்டனவென்றோ, அல்லது கடன் வாங்கப் பட வேண்டுவன வென்றோ கருத வேண்டாம். நமக்காக நம் முன்னோர் தேடிவைத்தவைகளே இவை. இதுவரையில் இங்நிலையை அறியாதிருந்தோம். இப்பொழுது அதனை அறிந்துகொள்ளும் நிலை ஏற்பட்டிருக்கிறது. அறிஞர்கள் இவ்வகையில் தங்கள் நல்லறிவைப் பயன்படுத்தி ஆராய்ந்து தெளிந்து நல்லன கொள்வார்களாக.

---

*கலித்தொகையில் நகைச்சுவை

திரு. ஆர். வீரபத்திரன் அவர்கள் M. A. தமிழ் விரிவுரையாளர்,
திருவிதாங்கூர்ப் பல்கலைக்கழகக்கல்லூரி, திருவநந்தபுரம்.

ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. சிரி; சிரித்து நீடுவாழ்ந் திரு; என்பது அதன் பொருள். மனிதவாழ்வு தழைப்பதற்குச் சிரிப்பு இன்றியமையாததென்பதை இப்பழமொழி நன்கு விளக்கு கிறது.

சமூக வாழ்வில் நகைப்பண்புக்கு எப்பொழுதுமே ஒரு தனிச் சிறப்புண்டு. மலர்ந்த முகமும், நகைகலந்த இன்சொல்லும் உடைய வர்களை எல்லோரும் விரும்புவர். இவ்வியல்புடைய ஓர் பெண்ணை, 'சிரித்த முகமுடைய சிதேவி' என்று பாராட்டுவர். சிரிக்கப் பழகிய வனை வாழ்க்கையில் கவலைகள் வாட்டுவதில்லை. துன்பம் வரும் போதும் அவன் அஞ்சாமல் இன்னகையே புரிகின்றான். அதனால் அத்துன்பத்தை எதிர்த்து வெல்வதற்குரிய ஆற்றலும் முயற்சியும் அவனிடம் தோன்றுகின்றன. திருவள்ளுவரும்

இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வ தஃதொப்ப தில்

என்று, துன்பங்களை வெல்வதற்கு நகையே சிறந்த துணையாகும் என்று கூறுகிறார். சிரிக்கத் தெரிந்தவனுக்கு எல்லோரும் நண்பர்க ளாக அமைவர். அவன் இருக்கும் இடத்தில் மகிழ்ச்சியும் இன்ப மும் தாண்டவம் புரியும். துன்பத்தின் வெம்மையால் வருந்து கின்றவர்களுக்கு அவன் குளிர்ந்த பூஞ்சோலையாக விளங்குகிறான். அவனால் உலகம் இன்பமயமாகக் காட்சிதருகிறது. சுருங்கக்கூறின் உலகமுழுவதுமே அவனுக்கு உரிமையாகிவிடுகிறது.

* இது திருவநந்தபுரம் வானொலி நிலையத்திலிருந்து 23—3—53-ல் பேசியபேச்சு; அனுமதியுடன் வெளியிடப்படுகிறது.

இந்நகைப்பண்பு வேறோர் வகையாலும் உலகுக்குப் பயன் விளைக்கிறது. மக்களிலே தீயபண்புடையவர்களும் காணப்படு கின்றனர். இவர்களால் சமூகத்திற்குப் பலவகையான துன்பங்கள் உண்டாகின்றன. அத்தீயவர்களை நல்லவர்களாக மாற்றுவதற்கு இந்நகையினும் சிறந்த கருவி வேறில்லை. நகைவிரவிய இன்சொல் லால் அவர்கள் குறைகளை எடுத்துக் கூறும்போது, அவர்கள் தாமே தம் செயல்களுக்கு நாணித் தீயஇயல்புகளைக் கைவிட்டுத் திருந்தி விடுகிறார்கள்.

மேல் விவரித்த சிரிப்பு எத்தகையது? பயனற்ற அசட்டுச் சிரிப்பா? அல்லது கொடுமையை விளைக்கும் குரோதச் சிரிப்பா? அல்ல. அன்புத் தடத்தில் அலர்ந்த இன்னகை அது; உலகமுழு வதையும் அன்பால் அணைத்துக்கொள்ளும் அமுதச் சிரிப்பு.

இத்தகைய சிரிப்பு இன்றைய உலகில் மிக அருமையாகவே காணப்படுகிறது. சாதாரண மக்கள் மட்டுமல்ல, அவர்களின் தலை வர்களாக விளங்குபவர்களும் சிரிக்கத் தெரியாதவர்களாக இருக் கின்றனர். அவர்களுக்குமட்டும் சிரிக்கத் தெரிந்தால் கொடிய போர் கள் உலகில் தோன்றியிருக்கமாட்டா. ஆனால் பாலை நிலத்திலே ஒரு சோலைநிலம் அமைந்தாற்போல, ஒரே ஒரு தலைவர் மட்டும் மனங் கனிந்து சிரிக்கும் மாண்புடையவராக இருந்தார். அவர்தான் பொக்கைவாய்ச் சிரிப்புக்குப் புகழ்பெற்ற காந்தியடிகள். சிரிக்கும் இயல்பைப் பெற்றிருந்ததால் ஒரு கோரயுத்தத்தைத் தவிர்த்து, ஒருதுளி இரத்தமும் சிந்துதலின்றி, இந்திய சுதந்திரத்தை ஈட்டித் தர அவரால் முடிந்தது.

இந்த நிஜவுலகைப் போலவே, பெரும் புலவர்கள் படைக்கும் இலக்கிய உலகமும் நகைச்சுவையால் பொலிவுபெறுகிறது. இலக் கியங்களிலுள்ள கதையமைப்பு, பாத்திர சிருஷ்டி முதலியவற்றைப் போலவே, அவற்றுள் ஆங்காங்கு அமைந்து மிளிர்கின்ற நகைச்

சுவைகளும் நம் உள்ளத்திற்கு நல்விருந்தாகின்றன. ஆகவே நகைச் சுவையை இலக்கியங்களில் இயலுமிடமெல்லாம் அமைப்பதைப் புலவர்கள் நியதியாகக் கொண்டனர். ஒழுக்கநூலான திருக்குறள் முதலியவற்றிலும் நகைச்சுவை விரவிவருகிறது. தமிழிலுள்ள மிகப்பழமையான நூலாகக் கருதப்படும் தொல்காப்பியம் நகைச் சுவையையும் அதைப்போன்ற பிறசுவைகளையும் விரிவாகவும் நுணுக்கமாகவும் ஆராய்கின்றது. தொல்காப்பியர் சுவையை எட் டாக வகுத்து, நகைச்சுவையை முதலில் கூறுகிறார். அவர் இறுதி யாகக் கூறும் சுவை உவகை என்பதாகும். நாம் சாதாரணமாக நகைக்கும் உவகைக்கும் அதிக வேறுபாடு கருதுவதில்லை; உவகை யின் வெளிப்பாடே நகை என்று எண்ணுகிறோம். ஆனால் தொல் காப்பிய உரையாசிரியர்களுள் ஒருவரான இளம்பூரணர், அவர் கருத் தைத் தெளிவுபடுத்துகின்றனர். அவர் நகை இகழ்ச்சிபற்றிப் பிறக்குமென்றும், உவகை சிருங்காரம் பற்றித் தோன்றுமெனவும் கூறுவர்.

தொல்காப்பியர் நகைக்குரிய காரணங்களையும் ஆராய்கிறார்.

> எள்ளல் இளமை பேதமை மடன்என்று
> உள்ளப் பட்ட நகைநான் கென்ப

என்பது அவர் சூத்திரம். இவை ஒவ்வொன்றும் தன்கண் நிகழ் தல், பிறன்கண் நிகழ்தல் என இருவகைப்படும். உதாரணமாக, எள்ளல் என்பது தான் பிறரை எள்ளி நகுதலும், பிறரால் எள்ளப் பட்டபோது தான் நகுதலும் என இருவகைப்படும். ஏனையவும் இவ்வாறே இவ்விரண்டாக வரும். செயிற்றியனார் என்ற புலவர் ஒருவரும் நகைச்சுவையைக் குறித்து ஆராய்ந்துள்ளார். நகை தோன்றுவதற்குக் காரணமான பொருள்களையும் செயல்களையும் கூறுமிடத்து, மூடவர் செல்லும் செலவு, மடவோர் சொல்லும் சொல், கவற்சி பெரிதுற்றாரைப்போர் பித்தர் பிதற்றிக் கூறுதல், குழவி கூறும் மழலை, கல்லார் கூறும் கல்வி, ஆரியர் கூறும் தமிழ் முதலியவற்றைக் குறிப்பிடுகிறார்.

ஆங்கில ஆசிரியர்கள் நகையை Humour, wit, satire, irony என்று பலவாறாகப் பகுத்து ஆராய்வர். தமிழாசிரியர்கள் அதனை முறுவலித்து நகுதல், அளவே சிரித்தல், பெருகச் சிரித்தல் என மூன்றுவகையாகப் பாகுபாடு செய்வர்.

நகைச்சுவை எல்லா நூல்களுக்கும் உரியதாயினும், குறுந் தொகை, நற்றிணை, கலித்தொகை முதலிய அகப்பொருள் நூல் களிலே மிகுதியாகப் பயின்றுவரும். அவற்றுள் கலித்தொகையில் அமைந்துள்ள நகைச் சுவைகளில் சிலவற்றைக் காண்பாம்.

நகைச் சுவையை ஆராயப் புகுமுன் ஓருண்மையை நாம் நினை விற்கொள்ளவேண்டும். கற்கண்டை வாயிலிட்டு எல்லோர்க்கும் சுவைக்கலாம். ஆனால் அச்சுவை இவ்வாறு இருந்ததென்று பிறர்க் குக் கூறுவது எளிதல்ல. அதுபோலவே நகைச்சுவையை நூல் களில் கற்று அநுபவிக்கலாம். ஆனால் அவ் அநுபவத்தை வார்த்தைகளால் வெளிப்படுத்தும் போதுதான் அதன் கஷ்டப் பாட்டை நாம் உணர்கிறோம். இனி நூலுட்புகுந்து நகைச்சுவை யினை நுகர்வோம்.

இளங்காதலர்கள், முற்றிய காதல்நிலையில் நின்று புரியும் காதல் விநோதங்களை அவர் தம்வாயால் கூறும்போதும், அவர் முன்னிலை யில் பிறர் கூறும்போதும் கேட்பவர்களுக்கு நகையுண்டாவதியல்பு.

ஒரு தலைவனும் தலைவியும் களவொழுக்கத்தில் ஈடுபடுகின்ற னர். இருவரும் பூக்கொய்தும், புள் ஓப்பியும், அருவியாடியும், சுனைகுடைந்தும் காதல் இன்பத்தை நுகர்கின்றனர். இவரதொழுக் கம் தலைவியின் தோழிக்குமட்டும் நன்றாகத் தெரியும். அதைக் குறித்து ஒன்றும் அறியாத தலைவியின் பெற்றோர் அவளுக்கு வேறு மணம்புரிய ஆலோசனை செய்கின்றனர். தலைவி இதை அறிந்து தான் விரும்பிய தலைவனையே மணக்கப் போவதாகத் தன்தோழி

யின் மூலம் பெற்றோர்க்கு அறிவிக்கின்றாள். அப்போது தலைவி யின் தந்தையும் தமையன்மாரும் அடைந்த கோபத்திற்கும் வருத் தத்திற்கும் அளவில்லை. பின்னர் அவர்கள் ஒருவாறு ஆறி, தம் மகளை அவள் விரும்பிய தலைவனுக்கே கொடுக்க நிச்சயித்தனர். அன்று மாலை தலைவியும் தோழியும் மலையருகிலுள்ள ஒரு தனியிடத் துக்குச் செல்கின்றனர். அங்குவைத்துத் தோழி தலைவியைப் பார்த்துப் பின்வருமாறு கேட்கிறாள்.

"தலைவி! உற்றார் உறவினர்கள் சூழ்ந்துநிற்கும் மணவறை யிலே, நீயும் உன் தலைவனும் அடுத்திருந்து மணவினைச் சடங்குக ளைச் செய்யும்போது நீங்கள் முன்னே ஒருவரைஒருவர் அறியாத வர்போல் நடந்துகொள்வீர்களோ? ஒருவேளை நீங்கள் அவ்வாறு நடந்துகொண்டாலும், உங்கள் பழைய உறவை அறியாதவள்போல உண்மையை மறைத்து நடிக்க என்னால் இயலுமோ? உங்களை அந் நிலையில் காணும்போது நான் நாணத்தால் கண்களைப் புதைத்துக் கொள்ள நேரிடுமே. கண்களைப் புதைத்துக்கொண்டால் உங்கள் நடிப்பையும் திருமணக் காட்சியையும் நான் காண்பதெங்ஙனம்? அக்காட்சியைக் காணாத கண்களையும் கண்களென்று கூறப்படுமோ?" என்றாள்.

இவ்வாறு தோழி கூறும்போது இருவர் உள்ளமும் களிப்புக் கடலில் மிதந்து திளைக்கிறது. தலைவியின்மனம் மணவறையைக் கற்பனையால் கண்டு, அதில் தான் நடந்துகொள்ளப் போவதைக் குறித்து எண்ணமிடுகிறது.

மற்றோர் காட்சி: ஞாழல்மலரின் பூங்கொத்தை முடித்த கூந் தல் தோளில் சரிந்துவிழ, பூரணசந்திரன் போன்ற அழகிய முகத் தோடு ஒரு பெண்மணி வருவதை ஒரு காமுகன் காண்கிறான். முத லில் அவள் ஒரு பாவையோ, அல்லது பல அழகிய உறுப்புக்களைப் பல மகளிரிடமிருந்து எடுத்துப் பிரமன் ஒருருவாகப் படைத்த

அந்தரியோ, அல்லது ஆடவர்மேலுள்ள வெறுப்பால் அவர்களை அழிப்பதற்காகக் கூற்றுவன் எடுத்துவந்த பெண்வடிவமோ? என்றெல்லாம் எண்ணமிடுகிறான். உடனே தன் இளமைமுறுக்கால் அவள் முன்னேபோய்நின்று போகவொட்டாமல் தடுக்க, அவளைப் பார்த்து "மான் போன்ற பார்வையும், வெண்மையான பற்களையும் உடைய பெண்ணே! உனது அன்னம்போன்ற நடையும், மயில் போன்ற சாயலும், காமக்கடலைக் கடக்கப் பயன்படுகிற மூங்கிலை ஒத்த தோளும், கோங்கின் முகையும் குரும்பையும் ஒத்த பெரிய இளந்தனங்களும் உன்னைப் பார்ப்பவர் உயிர்களை அப்படியே வாங்கிக் கொள்ளும், என்பது உனக்குத் தெரியுமா, தெரியாதா?" என்று கேட்டான்.

அவனது இந்த வித்தை அவளிடம் பலிக்கவில்லை. அவள் ஒரு கணப்பொழுது அங்கே நின்று, அவனை ஒரு பார்வை பார்த்து விட்டு, ஒன்றுமேபேசாமல் தன்னெறியிலே சென்றுவிட்டாள். அவள் இவ்வாறு ஒருவார்த்தைகூடப் பேசாமல் உதாசீனமாகச் செல்வது தலைவனுக்கு வயிற்றெரிச்சலைக் கிளப்பிற்று. அவன் அவள் செல்லும் திசைநோக்கித் திரும்பிநின்று அவளிடம் கூறுபவன்போல, "உன்பேரில் ஒரு குற்றம் இல்லை. உன்னை வீட்டிலிருந்து வெளியே போவதற்கு அனுமதித்த உன்னுடைய சுற்றத்தார்மீதும் குற்றமில்லை. குற்றமுடையவன் யாரென்றால் இந்நாட்டை ஆளும் அரசனே. மதம்பொழிந்து கட்டுக்கடங்காமல் திரிகின்ற யானையைப் பாகர்கள் நீராட்டுவதற்கு வெளியே கொண்டுசெல்லும்போது ஆட்கள் வழியினின்றும் விலகிக்கொள்ளும்படி பறையறைந்து தெரிவிக்குமாறு கட்டளையிட்டிருப்பதைப்போல நீவரும்போதும் 'இதோ வருகிறாள் ஒருபெண்; ஒரு தாக்கணங்கு; எல்லோரும் விலகிக் கொள்ளுங்கள்': என்று பறையறைந்து அறிவித்து மக்கள் அகன்று போகுமாறு முன் எச்சரிக்கை செய்யாமலிருந்த, அந்த அரசனைச் சொல்வதற்கில்லாமல் வேறு யாரைக்குறைகூறுவதற்கிருக்கிறது?"

நீயும் தவறிலை நின்னைப் புறங்கடைப்
போதர விட்ட நுமரும் தவறிலர்
நிறையழி கொல்யானை நீர்க்குவிட் டாங்குப்
பறையறைந் தல்லது செல்லற்க என்னா
இறையே தவறுடை யான்

என்றான். தலைவன் இவ்வாறு வயிறெரிந்துபேசுவது கேட்போர்க்கு நகையை விளைக்கிறது.

வேறோர் காட்சி: காதல்பாதை கரடுமுரடாக உள்ளதென்பர். மணம் செய்வதற்குமுன் நிகழும் களவொழுக்கத்திலே பற்பல இடையூறுகள் காதலர்களுக்கு நேர்வதுண்டு. அவற்றுள் பலவும் பிறரிடம் சொல்வதற்குத் தகுதியற்றவையாக இருக்கும். வெளியே தெரிந்துவிட்டால் ஊரும் நாடும் ஒன்றாகச் சிரிக்கும். அத்தகைய ஒரு அனுபவம் ஒருதலைவிக்கு வாய்க்கிறது.

தலைவன் ஓர் இடத்தைக் குறிப்பிட்டு நள்ளிரவில் அங்குவந்து தலைவியைச் சந்திப்பதாகச் சொல்லியிருந்தான். அவளும் அதற் கேற்ப ஒரு பெரிய போர்வையால் தன் தலையையும் உடலையும் நன்றாகப் பொதிந்துகொண்டு அக் குறியிடத்தில் வந்து தலைவன் வருகைக்காகக் காத்துநின்றாள். அதற்கிடையில், புலியைப் பிடிப்பதற்காக அமைத்துவைத்த வலையில் ஒருநரி அகப்பட்டுக்கொண்டதைப் போன்ற ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அவ்வூரிலே வழுக்கைத்தலையும் கருங்குட்டத்தால் குறைந்த காலும் கையும் உடையனாய் நொண்டிநொண்டி நடக்கும் ஒரு கிழவன்,

நீரத் தறைந்த தலையுந்தன் கம்பலும்
காரக் குறைந்து கறைப்பட்டு வந்துநம்
சேரியிற் போகா முடமுதிர் பார்ப்பான்

இருந்தான். தொழுநோயாளனாயினும் அவன் ஒழுக்கம் கெட்டவன். எங்கேயாவது பெண்கள் தனியாக நின்றால், அவன் காம

வேட்கையோடு அருகில்சென்று அவர்கள்மேல் சாய்ந்து விழுந்து விடுவது வழக்கம். இவன் விஷயத்தில் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்று தோழி தலைவிக்கு முன்னரே அறிவித்திருந் தாள். தலைவி தலைவன் வருகைக்காகக் காத்து நிற்கும்போது அம் முதியோன் அவ்வழியாக வந்தான்.

வந்தவன் தனியே ஓர் உரு நிற்பதைக்கண்டு அதன் அருகில் சென்று குனிந்து பார்த்தான். அவ்வுரு ஒருபெண் என்று தெரிந்து கொண்டான். உடனே மன்மதன் அவனிடம் சேஷ்டைபண்ண ஆரம்பித்தான். கிழவன் அவளைப் பார்த்து, "ஏ பெண்ணே நீ என்னிடம் அகப்பட்டுக்கொண்டாய்" என்று சொல்லி, வைக்கோலைக் கண்ட கிழட்டெருது அதைவிட்டு அகலாததைப் போல, அவளைச் சுற்றிச்சுற்றிவந்தான். தனது விருப்பத்திற்கு அவளை இணக்க வைப்பதற்காகத் தன்னிடமிருந்த வெற்றிலைப் பையை அவளிடம் நீட்டி, "பெண்ணே! இந்தா வெற்றிலை போட்டுக்கொள்" என்று கூறினான். இதற்கெல்லாம் தலைவி ஒன்றுமே பேசாமலும், அக்கம் பக்கம் நகராமலும் நின்றுகொண்டிருந்தாள். இதைப் பார்த்ததும் கிழவன் உள்ளத்தில் தான் காண்பது உண்மையானபெண்ணா? அல்லது ஏதேனும் மோகினிப்பிசாசு இவ்வாறு பெண்ணுருக்கொண்டு நிற்கிறதா? என்ற சந்தேகம் உண்டாயிற்று. உடனே அவன் நிலைமையில் மாறுதல் ஏற்பட்டது. காதல் அவனைவிட்டுப் பறந்தது; அச்சம் ஆட்கொண்டது. அங்கிருந்து சற்று எட்டி விலகி நின்று, "ஏ பெண் பிசாசே! நான் யார் தெரியுமா? நான் ஓர் ஆண் பிசாசு. நீ எனக்கு ஒரு துன்பமும் செய்யக்கூடாது. ஏதேனும் துன்பத்தை உண்டுபண்ணினால் எனக்கு மிக்க கோபம்வரும். அப்போது நான் என்னசெய்வேன் தெரியுமா? உனக்கு இவ்வூரில் கிடைக்கும் பலி எல்லாவற்றையும் நானே எடுத்துக்கொள்வேன். அப்புறம் நீ பட்டினி கிடக்கவேண்டியதுதான். ஆகையால் என்னை ஒன்றுமே செய்யாதே": என்று இவ்வாறு வாயில்வந்தபடி சொல்லி இரந்தான்,

இதைக் கேட்ட தலைவிக்குக் கிழவன் தன்னைப் பிசாசு என்று எண்ணி அஞ்சுகிறான் என்பது தெரிந்துவிட்டது. உடனே அவள் ஆட்டங்கொண்டு நிற்கும் அம் முதியவனை ஓட்டங்காண விரும்பி, கீழே குனிந்து கைநிறையமண்ணை வாரி அவன்மேலே தூவினாள். அவன் பேய் தன்னைத் தாக்கிக்கொல்லவருவதாகஎண்ணி 'ஓ' என்று அலறி வாய்குழறிக்கொண்டு ஓடினான். அதைக்கேட்ட ஊராரெல்லாம் நித்திரை கலைந்து எழுந்து ஓடிவந்தனர். கிழவனது இந்நாடகத்தால் தலைவிக்கு அன்று தலைவனைக்கூடி மகிழமுடியாமலாயிற்று. இது நிகழ்ந்த சில நாட்களுக்குப் பின்னர், தலைவி தன் தோழியிடம் இச்செய்தியைக் கூறினாள். அப்போது தலைவியும் தோழியும் குலுங்கக்குலுங்கச் சிரித்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

இன்னும் ஒருநிகழ்ச்சிமட்டும்: ஒருதலைவன் இராப்பொழுதைப் பரத்தை வீட்டில் கழித்துவிட்டு அதிகாலையில் தன்தலைவியிடம் வருகிறான். அவன் ஆடை முசிந்திருக்கிறது, உடலில் பூசிய சந்தனம் வேர்வையால் அழிந்துள்ளது. தோளில் கிடக்கும் மாலை கசங்கி வாடியிருக்கிறது. தலைவி அவனைப்பார்த்துத் "தாங்கள் எங்கு சென்றிருந்தீர்கள்?" என்று வினவினாள். அதற்குத் தலைவன் "நான் குதிரைசவாரி செய்துவிட்டு வருகிறேன்" என்றான். உடனே தலைவி "அப்படியா! தெரிந்துகொண்டேன்; ஐந்து பகுப்பாக முடிக்கப்பட்ட கூந்தலையும் புல்லிகை, தெய்வஉத்தி, சுட்டி, கண்டிகை முதலிய அணிகளையுமுடைய அந்தக்குதிரையை அதன் மேகலை சதங்கை சிலம்பு எல்லாம் ஒலிக்கும்படி வெளியிலன்றி நிலா முற்றத்திலுள்ளே ஊர்ந்து உடம்பு இளைத்துப்போனீர்களே; ஐயோ! அக்குதிரையா இவ்வாறு நகத்தால் கிள்ளியும் வாயால் கவ்வியும் ஊறுசெய்தது? என்ன பொல்லாத குதிரை அது! பாணனை அனுப்பி உங்களை அழைத்ததும் அக்குதிரைதானே. உங்கள் பழைய உருவைக்கெடுத்துவிடக்கூடிய அக்குதிரையில் இனி ஏறாதீர்கள். ஏறுவதானால் இந்தப் பக்கமாக வாராதீர்கள்"

என்று சொன்னாள். தலைவன் தன் பரத்தமையைக் குதிரை யூர்ந்ததாகக் கூறி மறைப்பதும், தலைவி உண்மையை உணர்ந்து பரத்தையின் இயல்புகளனைத்தையும் குதிரையிலேற்றி அவனுக்குப் பரிகாசமாக விடைதருவதும், தலைவன் தலைவியர்க்கே, அவர்களுக்குள்ளே வேறுவகையான வருத்தங்கள் இருந்தபோதிலும், நகைவிளைக்கக்கூடியதாகும். நாமும் அப்பாடலைக் கற்கும்போது அந்நிகழ்ச்சியை மனக்கண்ணால் கண்டு உள்ளத்தால் உணர்ந்து சிரித்து மகிழ்கிறோம்.

இத்தகைய நகைச்சுவைப் பகுதிகள் கலித்தொகையில் அதிகமாக உள்ளன. நகைச்சுவை மிகுதியாக அமைவதால் இலக்கியங்கள் உயர்ந்த மதிப்பைப் பெறுகின்றன. நகைச்சுவை யில்லாத இலக்கியத்தைக் கற்பது வறண்ட பாலைநிலத்தில் பிரயாணம் செய்வதை ஒக்கும். நகைச்சுவை மிளிரும் இலக்கியங்களோ, தென்றல் தவழும் தேமாஞ்சோலையில் உலவுவதைப் போன்ற இன்ப உணர்ச்சியைக் கற்றோர்க்கு விளைக்கின்றன.

ஆக்ஸிஜன்

திரு. பெ. நா. அப்புஸ்வாமி ஐயர் அவர்கள், B. A., B. L., சென்னை.

நமது பூமியில் ஒரு வாயுமண்டலம் இருக்கிறது. அது பூமியையும், பூமியில் வாழும் நம்மையும் நாலுபக்கங்களிலும், தலைக்கு மேலும், சூழ்ந்திருக்கிறது. நீரால் அமைந்த கடலில் மீன்கள் வாழ்வதுபோல, வாயுமண்டலம் என்னும் கடலில், அடிமட்டத்தில், நாம் வாழ்கிறோம். மீன்களின் வாழிடமாகிய நீரானது, அவைகளை நாலுபக்கமும் சூழ்ந்துள்ளபோதிலும், அவைகளின் கண்ணுக்குத் தெரிவதில்லை. அது போலவே, நம்மைச் சூழ்ந்துள்ள வாயுமண்டலமும் நம்முடைய கண்களுக்குத் தெரிவதில்லை. ஆனால், அது இருப்பதை நாம் வேறு வகைகளில் உணர்கிறோம்.

வாயுமண்டலம் மென்மையான பொருள்களால் அமைந்தது. அது பூமிமட்டத்தில் இருப்பதைவிட மேலே போகப்போக இன்னும் மெல்லியதாகிறது. சுமார் ஐம்பது அறுபது மைலுக்கு மேலே, இனி வாயுமண்டலம் இல்லை என்றே சொல்லும்படி அவ்வளவு மெல்லியதாகி விடுகிறது.

நமது பூமியில் வாயுமண்டலம் இருப்பதாலேயே அதில் உயிரினங்கள் காணப்படுகின்றன. வாயுமண்டலம் இல்லாவிட்டால், பூமியில் உயிர் தங்கி வாழமுடியாது. வாயுமண்டலம் இல்லாத சந்திரன் உயிரற்ற உலகமாயிருப்பதுபோல், பூமியும் உயிரற்ற உலகமாகிவிடும். 'ஐந்து வாரம் உணவில்லாமல் இருக்கலாம்; ஐந்து நாள் நீரில்லாமல் இருக்கலாம்; ஐந்து நிமிஷம் கூட வாயு இல்லாமல் இருக்கமுடியாது' என்பது ஒரு முதுமொழி.

நமது வாயுமண்டலமானது ஒரேயொரு தனிவாயுவால் மட்டும் அமைந்தது அன்று. அதில் சில வாயுக்கள் கலந்து காணப்படுகின்

---

*இது சென்னை அகில இந்திய வானொலி நிலையத்தில் 27-1-53-ல் ஒலிபரப்பியது. அந்நிலயத்தார் அனுமதியுடன் வெளியிடப்படுகிறது.

றன. அவற்றுள் முக்கியமானவை ஆக்ஸிஜன், நைட்ரஜன், கார்பன்-டை-ஆக்ஸைடு, ஆர்கன் முதலிய சில அரிய வாயுக்கள் என்பவை. இவைகளைத் தவிர, வாயுமண்டலத்தில் சிறிது நீராவியும், ஓரளவு மெல்லிய தூம்பு தூசிகளும் காணப்படுகின்றன.

இவற்றுள் நைட்ரஜனே அளவில் மிகுதியானது. அது வாயு மண்டலத்தில் கிட்டத்தட்ட ஐந்தில் நாலு பங்காக உள்ளது. அடுத்த படியாக வாயுமண்டலத்தில் அதிகமாகக் கலந்திருப்பது ஆக்ஸிஜன். இதைப்பற்றி முதலில் சற்றே தெரிந்துகொள்வோம்.

உலகத்திலுள்ள பொருள்கள் எல்லாம் சில அடிப்படைப் பொருள்களால் அமைந்திருக்கின்றன என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். அவைகளுக்கு மூலகங்கள் என்று பெயரிட்டிருக்கிறார்கள். ஆக்ஸிஜன் என்பது அவ்வகையான அடிப்படைப் பொருள்களில் ஒன்று. அது ஒரு மூலகம். அது வாயுவடிவமானது.

அது உலகத்தில் எங்கும் வியாபித்து மிகுதியான அளவில் உள்ளதாகக் காணப்படுகிறது. காற்றில்கலந்தும்; நீரில்கரைந்தும்; நீர், மணல், கல், பாறை, தரு, சர்க்கரை, துணி, காகிதம் முதலியவைகளிலும் காணப்படுகிறது. காற்றில் ஐந்தில் ஒரு பங்காகவும், நீரில் கிட்டத்தட்டப் பத்தில் ஒன்பது பங்காகவும், பாறைகளிற் கிட்டத்தட்டப் பேர்பாதியாகவும், பிராணிகளின் உடலில் ஐந்தில் ஒரு பங்காகவும் அது இருப்பதிலிருந்து அது எவ்வளவு மிகுதியாக எங்கும் காணப்படும் பொருள் என்பதை நாம் ஒருவாறு தெரிந்துகொள்ளலாம்.

இவ்வளவு மிகுதியாக இத்தனை பொருள்களில் காணப்படும் ஆக்ஸிஜன் மிகப் பழங்காலம் முதற்கொண்டே நமது முன்னோர்களுக்குத் தெரிந்திருக்கும் என்றே நீங்கள் எண்ணக்கூடும். ஆனால் உண்மை அது அன்று. சுமார் நூற்றெண்பது வருஷங்களாகவே ஆக்ஸிஜனைப் பற்றி நமக்குத் தெரியும்.

சுமார் நூற்றெண்பது வருஷங்களுக்கு முன்னால் இரசாயனத் துறையில் ஒரு புதிய பரபரப்பு உண்டாயிற்று. அப்போது சில புதிய வாயுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன. எவற்றிலிருந்தெல்லாம் வாயுக்களை

உண்டாக்கலாம் என்றும், அந்த வாயுக்களின் தன்மைகள் என்ன என்றும் சில விஞ்ஞானிகள் ஆராயத் தொடங்கினார்கள். பொருள்கள் காற்றில் எரிகின்றனவே, அப்போது என்ன நேர்கிறது? என்றும் அறிய முயன்றார்கள்.

அவர்களில் ஒருவர் ஸ்வீடென் நாட்டினரான ஷீல் என்பவர். இவர் ஒரு வியாபாரியின் மகன். மருந்து செய்வது அவருடைய தொழில். இரசாயன ஆராய்ச்சி அவருக்கு ஒழிவுநேரப் பொழுதுபோக்கு. அவர் தாம் முதன்முதலில் ஆக்ஸிஜனைக் கண்டுபிடித்தார். ஆனால் தாம் கண்டுபிடித்த செய்தியை அவர் வெளியே கூறவில்லை. அவர் இதற்குப் பிராணவாயு என்றும், நெருப்புவாயு என்றும் பெயரிட்டார்.

இங்கிலாந்து நாட்டினரான பிரீஸ்ட்லி என்பவர் மற்றொருவர். இவர் ஒரு நெசவாளியின் மகன்: ஒரு பாதிரி. இவரும் தம்முடைய ஒழிவு நேரத்தில் விஞ்ஞானத்துறையில் உழைத்துவந்தார். இவரும் தம்முடைய முயற்சியால் ஆக்ஸிஜனைக் கண்டுபிடித்தார். ஷீல் ஆக்ஸிஜனைக் கண்டுபிடித்திருந்தார் என்பது இவருக்குத் தெரியாது. தாம் கண்டுபிடித்ததை இவர் உடனே வெளியிட்டார்.

மூன்றாமவர் பிரான்சு நாட்டைச் சேர்ந்த லவாய்சியே என்பவர். இவர் ஒரு வழக்கறிஞரின் மகன். வழக்கறிஞராகப் பயின்றவர். ஆயினும் விஞ்ஞானத்தில் அளவு கடந்த பற்றுள்ளவர்; அதில் பெரிதும் ஈடுபட்டவர். ஆக்ஸிஜனுக்குப் பெயர் சூட்டியவர் இவரே. வாயு மண்டலத்திலுள்ள வாயுக்களில் ஆக்ஸிஜனும் ஒன்று என்றும், அது வாயுமண்டலத்தில் ஐந்தில் ஒரு பகுதியாக உள்ளது என்றும் நிரூபித்தவரும் இவரே.

ஆக்ஸிஜன் நிறமற்றது, மணமற்றது, சுவையற்றது. சற்றே நீரில் கரையும் இயல்புள்ளது. வெப்பத்தையோ, ஈரத்தையோ துணையாகக் கொண்டு எல்லாப் பொருள்களோடும் எளிதில் இணைவது. ஈரக் காற்றில் இரும்பில் எளிதில் துரு ஏறுகிறது, அல்லவா? துரு என்பது இரும்போடு ஆக்ஸிஜன் இணைவதால் உண்டாகும் ஒரு கூட்டுப்பொருள். ஆனால் இவ்வளவு எளிதாக இரும்போடு இணைசேர்ந்த ஆக்ஸிஜனை இரும்புத் துருவிலிருந்து எளிதில் பிரித்தெடுக்க முடிவதில்லை.

வேறொருவகைத் துருவிலிருந்து ஆக்ஸிஜனை வேறாகப் பிரித்தெடுக்க முடியும். அதுதான் பாதரஸத்தின் துரு.

ஈரம் நிறைந்த காற்றில் இரும்பு துருப்பிடிப்பதுபோல் பாதரசம் துருப்பிடிப்பதில்லை. நெடுநேரம் பாதரஸத்தைக் காற்றுப்படும் இடத்தில் காய்ச்சினால், அது செந்நிறமான தூளாகிறது. இதுதான் பாதரஸத் துரு. இதை விஞ்ஞானிகள் பாதரஸ ஆக்ஸைடு என்று சொல்லுகிறார்கள். இந்தத் துருவை மிக நன்றாகக் காய்ச்சினால், இதிலிருந்து ஆக்ஸிஜன் விடுபட்டுத் தனியாகப் பிரிந்துவிடுகிறது.

இவ்வாறுதான் லாவாய்சியே இதைத் தயார் செய்தார். பின்பு இதைப் பலவிதமாகச் சோதித்துப் பார்த்தார். பொருள்கள் காற்றில் எரிவதை விட இந்த வாயுவில் மிக நன்றாக எரிகின்றன என்பதைக் கண்டார். பொருள்கள் எரிவதற்கு இந்த வாயுவே இன்றியமையாதது என்றும், வாயுமண்டலத்திலிருந்து இதை நீக்கிவிட்டால் மிஞ்சியுள்ள வாயுவில் ஒரு பொருளும் எரிவதில்லை என்றும் நிரூபித்துக் காட்டினார். இவ்வளவு அற்புதமாக ஆராய்ச்சியைச் செய்த விஞ்ஞானியின் கதி என்ன தெரியுமா? 'நமது நாட்டுக்கு இரசாயனிகள் வேண்டியதில்லை' என்று கூறிப் பிரெஞ்சுப் புரட்சித் தலைவர்கள் இவருடைய தலையை வாங்கிவிட்டார்கள்!

ஆக்ஸிஜன் எல்லா உயிர்களுக்கும் இன்றியமையாதது. நிலத்தில் வாழும் பிராணிகள் எல்லாம் காற்றைச் சுவாசிக்கின்றன; அதிலுள்ள ஆக்ஸிஜனால் உயிர் வாழ்கின்றன. மண்ணில் முளைக்கும் தாவரங்களும் அவைகளின் விதைகளும் சுவாசித்து, ஆக்ஸிஜனை உட்கொள்ளுகின்றன. நீரில் வாழும் மீன்வகைகள் பலவும் நீரில் கரைந்துள்ள ஆக்ஸிஜனைச் சுவாசித்து, உயிர்வாழ்கின்றன. இப்படியாக எல்லா வகை உயிர்களும் வாயுமண்டலத்தின் பகுதியாக உள்ள ஆக்ஸிஜனைத் தமது உடலில் ஏற்று, தங்கி, வாழ்ந்துவருகின்றன.

நெருப்பு எரிவதாலும், இரும்பு முதலிய பொருள்கள் துருப்பிடிப்பதாலும், எல்லாவகை உயிர்களும் அதை உட்கொள்வதாலும், வாயுமண்டலத்திலுள்ள ஆக்ஸிஜன் குறைந்துபோனால், பின்பு இச்செயல்கள் ஒன்றும் நிகழமுடியாதே என்று கேட்கலாம். ஆனால் வாயுவிலுள்ள அசுத்

தங்களை நீக்கி, ஆக்ஸிஜனை அதற்கு மீண்டும் அளிப்பதற்கு இயற்கையில் ஓர் அற்புதமான ஏற்பாடு காணப்படுகிறது. கோடானுகோடி வகைப்படும் தாவரங்கள், அவற்றிலுள்ள குளோரோபில்லின் உதவியாலும் சூரியவெளிச்சத்தின் உதவியாலும், ஆக்ஸிஜன் வாயுவை வாயுமண்டலத்தில் கொட்டிக்கொண்டேயிருக்கின்றன. சோதனைச் சாலைகளில் இரசாயனிகள் ஆக்ஸிஜனை இயற்ற, வெப்பம் முதலிய துணைகளைக் கொண்டு, அரும்பாடுபடும்போது, அற்புதத் தாவரங்கள் அதை மிகவும் எளிதாக இயற்றிவிடுகின்றன என்பது ஒரு விந்தையல்லவா?

நுரையீரல் நோய்களால் வருந்துபவர்கள் தமக்கு வேண்டிய ஆக்ஸிஜனை வாயுமண்டலத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடிவதில்லை. இமய மலை போன்ற உன்னதமான சிகரங்களின் உச்சியை அடைய மலைமேல் ஏறும்போது, அந்த உயரத்தில் உள்ள வாயுமண்டலம் மெல்லியதாக இருப்பதால், மலை ஏறுபவர்களுக்கு வேண்டிய ஆக்ஸிஜன், அந்த வாயு மண்டலத்தில் இருப்பதில்லை. இவ்வாறே மிக உயரத்தில் பறக்கும் ஆகாய விமானங்களிலும். இந்த நிலைகளில் மக்கள் தூய ஆக்ஸிஜனைத் திரவமாக்கி அடைத்த எஃகுச் சாடிகளை உபயோகிக்கிறார்கள். அவற்றில் அடைபட்ட ஆக்ஸிஜனை அளவறிந்து சுவாசித்து, உயிர்வாழ்கிறார்கள்.

காற்றில் சாதாரணமாக எரியும் பொருள்கள் ஆக்ஸிஜனில் மிகுந்த ஒளியோடும் வெப்பத்தோடும் எரிகின்றன. அஸிட்டிலீன் வாயுவை ஆக்ஸிஜனின் துணையால் எரியச் செய்வதால் உண்டாகும் வெப்பம் மிகுந்த ஜ்வாலையானது, பொருள்களை உருக்கிப் பொருத்தி ஒன்றாக்கும் 'வெல்டிங்' முறையில் பயன்படுகிறது.

ஆக்ஸிஜன் இல்லாவிட்டால் என்ன ஆகும்? என்று சற்றே பார்ப்போம். வாயுமண்டலத்தில் ஆக்ஸிஜன் இல்லாவிட்டால், நாம் அனைவரும் மூச்சுத் திணறி இறந்து போவோம்; அவ்வாறே மற்றெல்லாப் பிராணிகளும். மேலும், செடி கொடிகள் முதலிய எல்லாத் தாவரங்களும் அழிந்துபோகும். இரும்பு துருப்பிடிக்காது; உலோகங்களின் பளபளப்பு மங்காது; நெருப்பு எரியாது. உலகம் உயிரற்றதாகிவிடும்.

ஆக்ஸிஜனே உயிரின் ஊன்றுகோல், அதன் அடிப்படையான ஜீவாதாரம்.

* நைட்டிரஜன்

திரு. பெ. நா. அப்புஸ்வாமி ஐயர் அவர்கள், B. A., B. L., சென்னை.

நமது பூமியைச் சுற்றி ஒரு வாயுமண்டலம் இருக்கிறது என்றும், அது பல வாயுக்களால் அமைந்தது என்றும், அவற்றுள் ஐந்தில் ஒரு பங்காக உள்ள ஆக்ஸிஜன் வாயுவே உயிருக்கு ஆதாரம் என்றும் உங்களுக்கு ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். இன்று வாயுமண்டத்தில் உள்ள நைட்டிரஜன் என்னும் மற்றொரு வாயுவைப் பற்றிச் சொல்லுகிறேன்.

நைட்டிரஜன் என்பது வாயுமண்டலத்தில் எங்கும் பரவிக்கிடக்கும் வாயு. இது வாயுமண்டலத்தில் மிகுதியான அளவில் காணப்படுகிறது. அளவுப்படி பார்த்தால், இது வாயுமண்டலத்தில் கிட்டத்தட்ட ஐந்தில் நாலு பங்காக உள்ளது. எடைப்படி பார்த்தால், வாயுமண்டலத்தில் முக்கால் பங்காக உள்ளது. இது வாயுமண்டலத்தில் இருப்பது நமது கண்ணுக்கோ, மூக்குக்கோ, நாவுக்கோ சாதாரணமாகத் தெரியாததால், இது நிறம் அற்றது; மணம் அற்றது; சுவை அற்றது என்று எளிதாகச் சொல்லிவிடலாம். இதில் உயிர் வாழமுடியாது; நெருப்பு எரிய முடியாது. ஆதலால், இதைச் சுமார் நூற்றெண்பது வருஷங்களுக்குமுன் கண்டுபிடித்த டேனியல் ரதர்போர்டு என்பவர் இதற்கு 'விஷ வாயு' என்று பெயரிட்டார், ஆக்ஸிஜனை ஆராய்ச்சி செய்த லவாய்சியே இதற்கு உயிர்ப்பகை என்று பொருள்படும் (Azote) அஸோட்டு என்று பெயரிட்டார். ஆனால், இந்த இரண்டு பெயர்களும் இதற்கு நிலைக்கவில்லை. சாப்டல் என்ற ஒருவர் நைட்டெர் என்னும் வெடியுப்பில் இது காணப்படுவதால், இதற்கு நைட்டிரஜன் என்று பெயர் இட்டார். அவர் இட்ட பெயர் நிலைத்துவிட்டது. ஆனால் அவருடைய பெயர் வெகு சிலருக்கே தெரியும். இதைப் போலவே வாழ்க்கையின் மற்றத் துறை

---

* சென்னை அகில இந்திய வானொலி நிலையத்தில் 10–2–53-ல் ஒலி பரப்பியது; அந்நிலையத்தார் அனுமதியுடன் வெளியிடப்படுகிறது.

களிலும் நடக்கிறது அல்லவா? நமது ஊர்களுக்குப் பெயரிட்டவர்கள் யார்? நமது தெய்வங்களுக்குப் பெயரிட்டவர்கள் யார்?

நைட்டிரஜன் அளவிறந்த சக்தியுடையது, ஆனால் முழுச் சோம்பேறி. மற்றப் பொருள்களோடு அது எளிதில் இணைவதில்லை. அப்படி இணைந்தாலும் ஆபத்தில் உதவாத நண்பனைப்போல, சட்டென்று உதறி, நீங்கிவிடுகிறது. இந்த இயல்புகளைக்கொண்டு அதற்கு ஜடவாயு என்றும், சோம்பேறி அரக்கன் என்றும், மந்தகுணம் உடையது என்றும், நட்புக்குணம் இல்லாதது என்றும், சுதந்திரப் பிரியன் என்றும் பலர் பலவகையாகப் பெயரிட்டிருக்கிறார்கள்.

இது வாயுமண்டலத்தில் ஆக்ஸிஜனோடு எங்கும் சென்று நெருங்கிப் பழகுகிறது; ஆனால் அதோடு இது சாதாரணமாக இணைந்து கூட்டுப்பொருள் ஆவதில்லை. நாம் காற்றைச் சுவாசிக்கிறோம் சுவாசிக்கும்போது ஒரு பங்கு ஆக்ஸிஜனுக்கு நாலு பங்கு நைட்டிரஜன் நமது நாசியின் வழியாக நுரையீரலை அடைகிறது. அங்கே ஆக்ஸிஜன் தொழில் புரிந்து, நமது அசுத்த ரத்தத்திலுள்ள அசுத்தங்களோடு கலந்து, ரத்தத்தைத் தூய்மையாக்கி, தான் அழுக்கடைந்து, உருமாறுகிறது. அதனோடு உள்ளே சென்ற நைட்டிரஜன், வேடிக்கை பார்த்துவிட்டு, சிறிதும் மாறுதல் அடையாமல், ஒன்றும் செய்யாமல், போனபடியே திரும்பவும் வெளியே வந்துவிடுகிறது. அது இப்படி நடப்பது தான் நமக்குத் தெரிகிறது. ஆனால் நைட்டிரஜன் ஆக்ஸிஜனோடு கூடவே சென்று திரும்பாவிட்டால் நம்முடைய கதி என்ன ஆகும் தெரியுமா? சக்திமிகுந்த ஆக்ஸிஜன் நமது உடலைத் தூயதாக்குவதற்குப் பதிலாக, அதைத் தொலைத்துவிடும். ஆக்ஸிஜனை இப்படிச் செய்யவிடாமல், அதை அடக்கி ஆள்வது அதனோடு கூட உள்ள நைட்டிரஜன் செய்யும் அற்புதமான வேலை. 'மோட்டார் காருக்கு எஞ்சினைவிட பிரேக்கு முக்கியம்' என்று எந்திரசிற்பனர்கள் சொல்வதுண்டு. அது போலவே, ஆக்ஸிஜனைவிட உயிருக்கு நைட்டிரஜன் முக்கியம் என்று கூடச் சொல்லலாம்.

இது மற்றொரு வகையிலும் உண்மை. நைட்டிரஜன் இல்லாவிட்டால் எவ்வகையான உயிரும் இருக்க முடியாது என்று சொன்னால் அது மிகையாகாது. ஏனென்றால், ஒவ்வொரு தாவரத்தின் உறுப்பிலும், ஒவ்வோர் உயிர்ப்பிராணியின் உடலிலும் நைட்டிரஜன் ஒரு பகுதியாக இணைந்து காணப்படுகிறது. ஆயினும் நைட்டிரஜனின் மிகப் பெரும் பகுதி வாயுமண்டலத்தில் ஒன்றோடும் இணையாதபடி தனித்த வாயு வடிவத்திலும், ஒரு சிறு பகுதி ஒவ்வொரு தாவரத்திலும் உயிர்ப்பிராணியிலும் பிற பொருள்களோடு இணைந்தும், இன்னும் ஒரு சிறு பகுதி மண்ணில் பிறபொருள்களோடு இணைந்த கூட்டுப்பொருளாகவும் இருக்கின்றன. பூமியில் ஆழப் போகப்போக, இது இல்லையென்றே சொல்லும்படி நைட்டிரஜன் மிக அருகியே காணப்படுகிறது.

உயிருக்கு மிகவும் அவசியமான புரோட்டீன் என்னும் உணவுப் பகுதியில் இது மிக முக்கியமான அம்சம். உணவை அழிக்கும் கொடிய விஷங்களாகிய ஆல்கலாய்டு என்னும் சில பொருள்களிலும் இது முக்கியப்பகுதி. அனேகம் மருந்துகளிலும், மயக்கம்வந்தவனை உயிர்ப்பிக்க உதவும் அம்மோனியாவிலும், தெளிவுள்ளவனை மயக்கம் அடையச்செய்யும் நைட்ரஸ் ஆக்ஸைடு என்னும் வாயுவிலும் இது காணப்படுவது இதன் விபரீதமான குணங்களை விளக்கும். பற்பல வாசனைத்திரவியங்களிலும், சாயங்களிலும் இது முக்கியப் பகுதியாக உள்ளது. பச்சை மத்தாப்புக்கும், அதற்கு நேர் எதிர் என்று நாம் கருதும் சிவப்பு மத்தாப்புக்கும் நிறம் அளிப்பதும் இதுவே. வெடிமருந்து, டைனமைட்டு, நைட்ரோகிளிசெரின், டி-என்-டி என்னும் பீரங்கிமருந்து முதலியவற்றின் பகுதியாக அமைந்து உயிரைக் கொள்ளைகொள்வதும் இதுவே. 'பேனை எடுத்தாலும் எடுக்கும் காதைக் கடித்தாலும் கடிக்கும்' என்னும் குரங்குச் சுபாவம் உள்ளதாக அல்லவோ நைட்டிரஜன் தோன்றுகிறது! வாயுமண்டலத்திலே, தன்னந்தனியாக, மனம்போல உலாவும் நைட்டிரஜனனது தாவரங்களின் உறுப்பிலும், பிராணிகளின் உடலிலும், மண்ணிலும் பகுதியாக அமைந்திருப்பதும் ஒரு விந்தை.

மேகங்களின் இடையே தெறிக்கும் மின்னற் பொறியானது வாயு மண்டலத்தை ஊடுருவிப் பாய்கிறது. அப்போது அதன் அளவுகடந்த வெப்பத்தினால் வாயுமண்டலத்தில் உலாவிவரும் நைட்டிரஜனும் ஆக்ஸிஜனும் இணைசேர்ந்து, ஒரு கூட்டுப்பொருள் உண்டாகிறது. அந்தக் கூட்டுப்பொருளை மேகத்திலிருந்து பொழியும் மழையானது மண்ணில் கொண்டு சேர்த்து, மண்ணில் ஊறச் செய்து, மண்ணோடு மண்ணாக்கு கிறது. வாயுமண்டலத்தில் சுயேச்சையாய்த் திரிந்த நைட்டிரஜன் கட்டுப்பட்டு, மண்ணில் வந்துசேருவதற்கு இது ஒரு முக்கியமான காரணம்.

மற்றொரு காரணம் இதைவிட விந்தையானது. பட்டாணி, அவரை, மொச்சை போன்ற சிலவகைச் செடிகொடிகளின் வேர்களில் உள்ள முண்டு முடிச்சுகளில் சில அற்புதமான பாக்டீரியாக்கள் வாழ்கின்றன. அவை வாயுமண்டலத்திலுள்ள நைட்டிரஜனைப் பற்றிப்பிடிக்கும் சக்திவாய்ந்தவை. தமக்கு வாழ இடங்கொடுக்கும் தாவரங்களுக்குக் குடிக்கூலியாக அவை வாயுமண்டலத்திலிருந்து நைட்டிரஜனைப் பற்றி, அவைகளுக்கு அளிக்கின்றன. ஆனால் இவ்வாறு அவை பிடித்துக் கொடுக்கும் நைட்டிரஜனின் அளவு அதிகம் இல்லை. ஏனென்றால் இவ்வகையான தாவரங்கள் அதிகம் இல்லை.

மின்னலால் மண்ணில் சேர்க்கப்படும் நைட்டிரஜனையும் பாக்டீரியாக்கள் அளிக்கும் நைட்டிரஜனையும் தாவரங்கள் ஏற்று வளர்கின்றன. தமது உறுப்பாக்குகின்றன. அந்தத் தாவரங்களைப் பிராணிகள் தின்கின்றன. அவற்றிலிருந்து தமக்கு வேண்டிய நைட்டிரஜனைப் பெறுகின்றன. அதனால் தமது உடலைப் போஷித்து வளர்க்கின்றன. மாமிச பட்சிணிகளான பிராணிகள் சாகபட்சிணிகளான பிராணிகளைத் தின்று அவற்றின் உடலிலிருந்து தமக்குவேண்டிய நைட்டிரஜனைப் பெறுகின்றன.

பின்பு தாவரங்களும் பிராணிகளும் மடிந்துபோகின்றன. அவை மண்ணில் விழுந்து அழுகிப்போகின்றன. அவற்றின் உடலில் உள்ள

நைட்ரஜனில் ஒரு சிறு பகுதி விடுபட்டு மீண்டும் வாயுமண்டலத்தை அடைகிறது. பெரும் பகுதி மண்ணோடு மண்ணாகிவிடுகிறது. இவ்வாறு நைட்ரஜன்வாயுவானது வாயுமண்டலத்திலிருந்து மண்ணை அடைந்து தாவரத்தின் உடலிலும் பிராணியின் உடலிலும் புகுந்து பின்பு விடுபட்டு வாயுமண்டலத்தை மீண்டும் அடையும் செயலானது சக்கரம்போல் திரும்பத்திரும்ப நடந்துவருகிறது. இதை நைட்ரஜன் சக்கரம் என்று சொல்லுகிறார்கள்.

வாயுமண்டலத்திலுள்ள நைட்ரஜனை இயற்கை பற்றிப்பிடிப்பது போல, தாமும் பிடிக்கவேண்டும் என்று விஞ்ஞானிகள் அரும்பாடு பட்டார்கள். இந்த முயற்சிக்கு முக்கியமான தூண்டுகோலாக இருந்தது, போருக்குவேண்டிய நைட்ரஜன் கூட்டுப்பொருள்களை இயற்றவேண்டும் என்னும் தீய மனப்பான்மை. இந்த முயற்சி வெற்றியடைந்தது. ஆனால், இதிலிருந்து மிகப் பெரிய நன்மையும் விளைந்துவிட்டது. பயிர்களுக்கு இன்றியமையாதவையான செயற்கை உரங்கள் இந்த வெற்றியின் விளைவாக இயற்றப்பட்டுவருகின்றன. கிணறு வெட்டுதல், சுரங்கங்களிலிருந்து கனிப்பொருள்களைப் பெயர்த்தெடுத்தல், பாறைகளைத் தகர்த்துப் பாதைகள் போடுதல் முதலிய நல்ல காரியங்களிலும் வெடிமருந்துகள் உதவுகின்றன.

இத்தனை அற்புதமாயும், ஒன்றுக்கொன்று மாறுபடுவதாயும் உள்ள குணங்களை உடைய நைட்ரஜனானது கண்ணுக்குத் தெரியாத மென்மை வாய்ந்த ஒரு வாயு என்பதை எண்ணிப் பார்க்கும்போது இதன் விந்தை மேன்மேலும் நம்மை வியப்படையச் செய்கிறது.

சங்ககால மன்னர்கள்

வித்துவான், கு. குமாரஸ்வாமி ஆச்சாரி அவர்கள், M. A. விரிவுரையாளர்
தமிழ்க்கல்லூரி, மயிலம்.

(74-ம் பக்கத் தொடர்ச்சி)

யானைக்கட்சேய் மாந்தரன்சேரலிரும்பொறை

சேரமான் மாந்தரன் சேரலிரும்பொறை சோழன் இராஜசூயம் வேட்ட பெருநற்கிள்ளியோடு பொருதவன் எனப் பேரிசாத்தனார் பாடிய (புறம் 125) செய்யுளின் அடிக்குறிப்புக் கூறுகிறது. குறுங்கோழியூர்கிழார், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனால் பிணிக்கப்பட்டிருந்து வலிதிற்போய்க் கட்டிலேறிய இம்மன்னனைப் புகழ்கின்றார் (புறம் 17, 20, 22). கிள்ளியொடுபொருதவனெனப்படுதலால் அக்கிள்ளியோடு நட்புக்கொண்டிருந்த சேரமன்னன் மாரிவெண்கோ இச்சேரமன்னனுக்குச் சமகாலத்தவனாகவாவது சற்று முந்தியவனாகவாவது ஆதல்வேண்டும். வழுதியொடும் கிள்ளியொடும்நட்புக்கொண்டிருந்த மாரிவெண்கோ நெடுஞ்செழியனால் வெல்லப்பட்டவனாகலாமோ எனவும் ஓர் ஐயம் எழுகிறது. பேரிசாத்தனார் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறனைப் பாடியிருக்கின்றார். "செறுத்த செய்யுட் செய்செந் நாவின், வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன், இன்றுள னாயின் நன்றுமன்" என இம்மாந்தரன் சேரல் கூறியதாகப் பொருந்திலிளங்கீரனார் என்னும் புலவர் கூறுகின்றார். ஆதலின், கபிலர் இம்மன்னனது ஆட்சித் தொடக்கத்திலாவது இளம்பருவத்திலாவது இருந்திருக்கவேண்டும். பெருஞ்சேரலிரும்பொறை காலத்துக் கண்ணகி காரணமாகப் பேகனைக் கபிலர் பாடியிருக்கிறார். இவ்விரண்டு காரணங்களையும் கொண்டு நோக்கின் யானைக்கட்சேய், பெருஞ்சேரலிரும்பொறைக்குப் பிற்பட்டவனாகவேண்டும் என்பது புலனாம். கடலோட்டிய வேல்கெழுகுட்டுவனது ஆட்சியின் இடைப்பகுதியாகும் இக்காலம்.

பல்யானைச்செல்கெழுகுட்டுவன், செல்வக்கடுங்கோ, நார்முடிச் சேரல், பெருஞ்சேரலிரும்பொறை ஆகியவர்களுக்குப் பூழிநாடு உரியது. ஆதலின், இவர்கள் ஒருவர்பின் னொருவராக அந்நாட்டினை ஆண்டவராதல் வேண்டும். உம்பற்காட்டுரிமை, நெடுஞ்சேரலாதன், பல்யானைச்செல்கெழுகுட்டுவன், குட்டுவன் ஆகியவர்களுக்குக் குறிக்கப்படுகிறது. பூழிநாடு, உம்பற்காடு ஆகிய இரண்டிடத்தும் உரிமையுடையவராகக் காணப்படுகிற பல்யானைச் செல்கெழுகுட்டுவன், செல்வக்கடுங்கோ உற்றதுணைவனாக விளங்கியிருக்க வேண்டும் என்பதும்; நார்முடிச்சேரல், கடுங்கோவிற்குப் பின்னும், அவனுக்குப்பின் பெருஞ்சேரலிரும்பொறையும் அரசு செய்தியவராதல் வேண்டும் என்பதும் புலனும். ஆதலின் பெருஞ்சேரலிரும்பொறைக்கு முந்தியவனாகிய நார்முடிச்சேரல் நெடுஞ்செழியனால் கொல்லப்பட்டவனாகான் என்பது உறுதியாகிறது.

எனின், நெடுஞ்செழியனால் கொல்லப்பட்ட சேரல் யாவன்? யானைக்கட்சேய் மாந்தரன் சேரலிரும்பொறை சிறையினின்றும் தப்பித்துச்சென்று கட்டிலேறினன். அங்ஙனம் கட்டிலேறியவன் நன்முறையில் நாடாண்டிருந்தனன் என்பது குறுங்கோழியூர் கிழார் பாடலால் விளங்குகிறது. நெடுஞ்செழியன், பகைவர்களை அவர்களது நாட்டினும் விடாது துரத்திச்சென்று பொருது கொன்றனன் எனப் புறநானூற்றுச் செய்யுள் குறிப்பதனால், சிறையினின்றும் தப்பிச்சென்ற சேரமன்னனை மீண்டும் நெடுஞ்செழியன் பொருது கொன்றிருக்கலாகாதோ என எண்ணவும் இடனுண்டு. நெடுஞ்செழியனால் அவனது கன்னிப்போரில் கொல்லப்பட்ட சேரன் யானைக்கட்சேய் மாந்தரன் சேரலிரும்பொறையாகவாவது பெருஞ்சேரலிரும்பொறையாகவாவது ஆதல்வேண்டும்.

வானவன்

"வரையளந் தறியாப் பொன்படு நெடுங்கோட்டு இமயஞ் சூட்டிய ஏமவிற்பொறி, மாண்வினை நெடுந்தேர் வானவன்" எனவும் (புறம் 39), "சினமிகு தானை வானவன் குடகடற் பொலந்தரு நாவாய் ஓட்டிய அவ்வழிப் பிறகலம் செல்கலா தனையேம்" எனவும் (புறம் 126) மாறோக்கத்துநப்பசலையார் இவ்வானவனது வீரச்செய

லைப் புகழ்ந்துரைக்கின்றார். இப்புலவரே இவ்வானவன் தொலைய வாடாவஞ்சி வாட்டினன் சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளி வளவன் எனக் குறிக்கின்றார் (புறம் 39). குட்டுவனது அகப்பா அழிய நூறினன் செம்பியன் என மாமூலனார் குறிக்கின்றார் (நற்). அச் செம்பியன் மருகன் இக்கிள்ளிவள்வன் என மாறோக்கத்து நப்பசலையார் கூறுகின்றார். பல் யானைச்செல்கெழுகுட்டுவன் அகப்பா எறிந்தனன் எனப் பதிற்றுப்பத்துள் மூன்றும்பத்துக் கூறு கின்றது. ஆதலின், இவ்வானவன் அக்குட்டுவனுக்குப் பிற்பட்ட வனும் கிள்ளிவளவன் காலத்தவனும் ஆதல்வேண்டும். கிள்ளிவள வன் காலத்துச் சேரமன்னன் கோதை என்பான். வானவன் மறவன் பிட்டனென ஆலம்பேரி சாத்தனார் அகம். 143ல் கூறுகின் றார். அப் பிட்டன், கோதையின் மறவன் என வடமவண்ணக்கன் தாமோதரனார் குறிக்கின்றார். ஆதலின் வானவனும் கோதையும் ஒருவர்பின்னொருவராக அரசெய்தியவராதல் வேண்டும். சேரமான் கோதை இமயவிற்பொறித்தனன் என்றோ முந்நீரோட்டினன் என்றோ குறிக்கப்படவில்லை. கோதை, குட்டுவன் கோதை என வும் குறிக்கப்படுகின்றான். ஆதலின் கோதை குட்டுவன் மகன் என்னலாம். ஆதலின் வானவன் குட்டுவனாதல் வேண்டும்.

முந்நீரோட்டிக் கடம்பறுத்து இமயத்து முன்னோர் மருள வணங்குவிற் பொறித்தவன் வலம்படு முரசிற் சேரலாதன் எனக் குறிக்கின்றார் மாமூலனார். அச்சேரலாதன், வேற்பஃறடக் கைப் பெருவிறற்கிள்ளியொடு பொருது, களங்கொள்வாரின்றிக் களத்தேவீழ்ந்தனன். அக்கிள்ளியும் வீழ்ந்தான். ஆதலின் வெற்றி கொண்டு வாழ்ந்தவனாகிய கிள்ளிவளவனால் கொல்லப்பட்ட வான வன், சேரலாதன் ஆகான். கடலோட்டினன் குட்டுவன் எனப் பரணர் குறிக்கின்றார் (அகம்). குட்டுவன் இமயவிற்பொறித்த வன் எனக்குறிக்கின்றார் சிறுபாணாற்றுப்படை ஆசிரியர். ஆதலின் கிள்ளிவளவனால் வெல்லப்பட்ட வானவன் கடலோட்டிய வேல் கெழுகுட்டுவனே யாதல் வேண்டும்.

கோதையும் இளஞ்சேரலிரும்பொறையும்

இளஞ்சேரலிரும்பொறை, "பொத்தியாண்ட கோப்பெருஞ் சோழனையும், வித்தையாண்ட இளம்பழையன் மாறனையும் வைத்த வஞ்சினம் வாய்ப்ப வென்றனன்." எனப் பதிற்றுப்பத்துள் ஒன்பதாம் பத்துப் பதிகம் கூறுகின்றது. பழையன்மாறன் கூடலாங் கண் கிள்ளிவளவனது நல்லமர் சாய்க்கக் கண்டு, சேரமான் கோதை உவந்தனன் என நக்கீரர் கூறுகின்றார் (அகம் 446); இக்கோதை குட்டுவன்கோதை எனவும் வழங்கப்படுகிறான். ஆதலின் இவன் தந்தை குட்டுவனாதல் வேண்டும். இளஞ்சேரலிரும்பொறையின் தந்தை குட்டுவன் இரும்பொறை எனப் பதிற்றுப்பத்துள் ஒன்பதாம் பத்துப் பதிகம் கூறுகின்றது. இவற்றை உற்றுநோக்கின் கோதையும் இளஞ்சேரலிரும்பொறையும் ஒருவரேயாக இருத்தலாகாதோ? என ஐயம் உண்டாகிறது.

அகநானூற்றில் (கம்பர் விலாசம் இராஜகோபால ஐயங்கார் பதிப்பு) பாடப்பட்டோர் வரலாறு கூறுமிடத்து, "கிள்ளிவளவன் பழையன்மாறனைப் போரிற் சாய்க்கக் கோதைமார்பன் மிக உவந்தான் (அகம் 346); இளஞ்சேரலிரும்பொறையால் வெல்லப்பட்ட இளம்பழையன்மாறன் இப் பழையன்மாறனுக்குத் தம்பிபோலும்" எனக் குறிக்கப்பட்டிருக்கிறது. இதனை நோக்கின் 'இளஞ்சேரலிரும்பொறை கோதைக்குப் பிற்பட்டவனாகவோ, சமகாலத்தவனாகவோ ஆதல் வேண்டும்' என்பது புலனாம். கோப்பெருஞ்சோழன், பெருங்கோக்கிள்ளி எனக் குறிக்கப்படுதலால் சிறப்பொடு விளங்கிய கிள்ளிவளவன் எனக் கருதற்கும் இடமுண்டு. இங்ஙனம் கொள்ளின் கோதையும் இளஞ்சேரலிரும்பொறையும் ஒருவரேயோ என்னும் ஐயந்தான் வலியுறுகின்றது.

பதிற்றுப்பத்து ஒன்பதாம் பத்துள் ஒரு பாட்டு இவ்விரும்பொறையினது முன்னோர்கள் செயலைக் கூறுகின்றது. அச்செய்யுட் பகுதி,

"வையக மலர்ந்த தொழின்முறை யொழியாது
கடவுட் பெயரிய கானமொடு கல்லுயர்ந்து
தென்கடல் வளைஇய மலர்தலை யுலகத்துத்

தம்பெயர் போகிய ஒன்னார் தேயத்
துளங்கிருங் குட்டந் தொலைய வேலிட்டு
அணங்குடைக் கடம்பின் முழுமுதற் றடிந்து
பொருமுர ணெய்திய கழுவுள் புறம்பெற்று
நாம மன்னர் துணிய நூறிக்
கால்வல் புரவி யண்ட ரோட்டிச
சுடர்வீ வாகை நன்னற் றேய்த்துக்
குருதி விதிர்த்த குவவுச்சோற்றுக் குன்றொடு
உருகெழு மாபின் அயிரை பரைஇ
வேந்தரும் வேளிரும் பின்வந்து பணியக்
கொற்ற மெய்திய பெரியோர் மருக"

என்பதாகும்.

இதனுள் குடக்கோ நெடுஞ்சேரலாதன், பல்யானைச்செல்கெழு குட்டுவன், களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல், பெருஞ்சேரலிரும் பொறை ஆகியவர்களுடைய செயல்கள் கூறப்பெற்றுள்ளன. "நன் மரந் துவன்றிய நாடுபல தரீஇப் பொன்னவிர் புனைசெய விலங்கும் பெரும்பூண், ஒன்னுப் பூட்கைச் சென்னியர் பெருமானை, முந்தைத் தம் மெனப் படையை யேவினன் இளஞ்சேரலிரும் பொறை" எனப் பதிற்றுப்பத்து 86-ம் பாட்டு, பகர்கின்றது. இவ்வொன்பதாம் பத்தைப் பாடியபுலவரே, உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி யைப் பரிசில் கடாவிப் பாடியிருக்கின்றார். ஆதலின் மேற்குறித்த பெரும் பூண்சென்னி இவ்விளஞ்சேட் சென்னியே யாகல் வேண் டும். ஆதலின், இவ்விரும்பொறை, குடக்கோ நெடுஞ்சேரலாதற் குப் பிற்பட்டவன்.

பெருஞ்சேர விரும்பொறையின் செயல்களுள், பொருமுர ணெய்திய கழுவுள் புறம்பெற்று நாமமன்னர் துணிய நூறிக் கால் வல் புரவி யண்ட ரோட்டிய செய்தி மாத்திரம் குறிக்கப்பட்டிருக்கி றது. (பதிற் 88). அவனது சிறந்த வீரச்செயலாகிய தகடூர் எறிந்த செய்தி குறிக்கப்படவில்லை. ஆதலின், பெருஞ்சேரவிரும்பொறை யின் ஆட்சியிறுதிக்காலத்தேயே, இவனை இப்பத்தால் பெருங்குன் றூர் கிழார் பாடியிருக்கவேண்டும். பெருஞ்சேரலிரும்பொறையின் சமகாலத்தவனாகி அவனுக்குப் பிறகும் வாழ்ந்தவனாதல் வேண்டும்.

இளஞ்சேரவிரும்பொறையால் வெல்லப்பட்ட கோப்பெருஞ் சோழனைப் பெருங்கோக்கிள்ளி என்றும் கூறுவதனால் அவன் கிள்ளி மரபினனாதல் வேண்டும், சென்னிமரபினனாகான். ஆதலின், பெரும்பூண் சென்னியும் கோப்பெருஞ்சோழனும் இருவேறு மன்னர்களாவர். இவ்விரும்பொறையின் காலத்துப் பாண்டிய மன்னன் பிசிராந்தையாரால் புகழப்பெற்ற அறிவுடை நம்பியாவன். இளம்பழையன் மாறன் இப்பாண்டியனது தானைத் தலைவன் போலும்.

பெரும்பூண்சென்னி என்பான், கொங்குநாட்டைக் கைப்பற்ற எண்ணித் தன் படைமுதலியாகிய பழையன் என்பானை ஏவினன். சேரனது தானைத்தலைவனாகிய கணையன்; நன்னன் ஏற்றை, அத்தி, கங்கன் கட்டி, புன்றுறை ஆகியவர்களொடுசென்று பழையனொடு பொருதனன். களம் பருந்துபடப்பண்ணிப் பழையன் பட்டனன். அச் செய்தியுணர்ந்த தானே போர்க்களஞ்சென்று பொருது கணையனைச் சிறைபற்றினன். கழுமலம் என்னும் நகரைத் தனதாக்கினன் (அகம் 44, நற் 10). இக்கணையன் பெருஞ்சேரவிரும்பொறை இளஞ்சேரவிரும்பொறை ஆகிய இருமன்னர்களுள் யாருடைய தானைத்தலைவன் என்பது உணர இயலவில்லை. தகடூர்எறிந்து கொங்குநாட்டைக் கைப்பற்றிய பெருஞ்சேரவிரும்பொறையின் தானைத் தலைவனாகத்தான் ஆகவேண்டும். இளஞ்சேரவிரும்பொறை இப்போரில் துணைசெய்தவனாவன் என்று யூகிக்கவும் இடனுண்டு. பெருஞ்சேரவிரும்பொறையால் வெல்லப்பட்ட சோழன் உருவப் பஃறேரிளஞ் சேட் சென்னியாகவேண்டும், என்பது முன்னர்க்குறிக்கப்பட்டுள்ளது. அச்சென்னியை வென்றனன் இளஞ்சேரவிரும்பொறை என்று குறிக்கப்படும் செய்தி மேற்குறித்த யூகத்துக்கு இடனளிக்கிறது.

[தொடரும்]